
.கே.வேலன்

# சாம்பாஜி

✻

ஏ. கே. வேலன்

✻

திராவிடன் பதிப்பகம்
P. B. No. 18, வேலூர் N. A.

முதற் பதிப்பு 1951

உரிமை ஆசிரியருக்கு



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'

அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக

மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு

அன்புடன் அளிக்கப்பட்டது.

**27-1-1979**

தென்றல் பதிப்ப ம், வேலூர் N. A.

*Vinodan Press, 33, [illegible]nes Street, G. T. [illegible]*

# பதிப்புரை

“**சாம்பாஜி**” – மராட்டிய சாம்ராஜ்யத்திலே நடைப்பெற்ற ஒரு சிறு வரலாற்றினைக் கொண்டதுதான் இந் நாடகம்.

மராட்டியத்தின் திலகம், மாப்புகழ் வீரர் **சிவாஜியின்** ஆளுகைக்குப்பின் நடந்தவைகளை யெல்லாம் ஒன்றன் பின் ஒன்ருகப் பின்னப் பட்டு உங்கள் முன் திரையிடப்படுகிறது.

சிந்தனையும், கருத்தும் நிறைந்த இந் நாடகத்தை மேடையில் நடிப்பதற்கும், படித்துச் சுவைப்பதற்கும் ஏற்ற முறையில் நல்லதொரு இன்ப அருவியாக அமைத்துள்ளார் ஆசிரியர்.

இவ் வரிய நாடகத்தை நூல் வடிவிலே வெளியிட்டுக்கொள்ள அனுமதித்த தோழர் **ஏ. கே. வேலன்** அவர்கட்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

—**பதிப்பகத்தார்**

# சாம்பாஜி

[மாவீரன் சிவாஜியின் வாளாண்மையால் மகமதிய ஆதிக்கத்தினின்றும் மீண்டது சாத்பூரா. மலர்ந்தது மராட்டியம். அண்டை அயலரசுகள் அதன் சுதந்தரத்தை அங்கீகரித்தன. ஜாகீர்தார் சிவாஜி, சத்ரபதி சிவாஜியாகச் சிம்மாதனம் ஏறினர். போர் முனையிலிருந்த கவனம் ஏர் முனைக்குத் திரும்பியது. நாடு செழித்தது. மக்களின் வாழ்வு கொழித்தது. இந்த நிலையில் ஒரு நாள்......]

## காட்சி 1.

இடம்: சோலைப்புறம்.

மாந்தர்; இளம் பெண்கள், கவிகுலேஷ், சாம்பாஜி.

(இளங் கன்னியர்கள் அல்லிமலர் ஓடையில் ஆடித் திளைத்துவிட்டு, அன்னை பவானி கோயில் நோக்கி நாட்டுப் பண் இசைத்த வண்ணம் நடக்கின்றனர். இளவரசன் சாம்பாஜியும் கவிகுலேஷனும் இக் காட்சியைக் கண்டு, தொடர்கின்றனர்.)

**கவிகுலேஷ்:** இளவரசே! அதோ அழகோடையில் நீந்தி வரும் இள அன்னங்கள்!

**சாம்பாஜி:** ஆம். நம் கண்ணுக்கினிய விருந்து!

**கவி:** எவ்வளவு கவர்ச்சி?

**சாம்:** இதயத்தை இழுக்கும் காந்த சக்திதான்!

**கவி:** அந்தத் தந்தச் சிலைகளைப் பற்றித் தனித்தனிக் காவியங்கள் எழுதலாம்.

**சாம்:** கவிதைகள் மிகவும் சுவையாகத்தானிருக்கும்.

**கவி:** பாருங்கள். கார்மேகம், தன்னை அவர் கூந்தலுக்கு உவமிக்கச் சொல்லுகிறது. மாந்தளிர் அவர்கள் மேனியின் மென்மையோடு ஒப்பிடச் சொல்கிறது. கொடுவேல் அவர்கள் கூர்விழிக்குத் தோற்பேன் என்

கிறது. செந்தாமரை, அவர்கள் சிவந்த கன்னங்களின் நிறத்தில் இரவல் கேட்கிறது.

சாம் : ஆம். உன் வர்ணனை கற்பனை அல்ல. கண்கூடானது.

கவி : என் கண்ணொளி கூட அவர்கள் அழகு வெளிச்சத்தில் மழுங்கிவிட்டது அரசே !

சாம் : குலேஷ்! அவர்கள் என்ன பளிங்கினைப் போர்த்தி வருகிறார்களா ?

கவி : அல்ல. நனைந்த ஆடை அவர்கள் நலத்தையெல்லாம் அப்படி வெளிப்படுத்துகிறது !

சாம் : ஓ ஹோ !

கவி : அத்துடன் அலாரத கூந்தல்...! நுகராத இளமை...!

(அப்பெண்கள் மிரண்டு ஓடுகின்றனர்.)

சாம் : அடே ! ஓட்டம் பயில்கின்றனரடா !

கவி : நாம் அவர்களுக்குத் தோற்று விடுவோம் ?

(இருவரும் துரத்திச் செல்லுகின்றனர். அவர்களில் அச்சத்தால் கால் இடறுகிறாள் ஒருத்தி. அவளை வழி மறிக்கிறான் குலேஷன். வாரி எடுக்கிறான் இளவாசன்.)

## காட்சி 2.

இடம் : வழிநடை.

மாந்தர் : பெண்கள்.

(இளவரசனின் பிடிக்குத் தப்பிய அவ்விளம் பெண்கள் சோகக் குமுறலுடன் வீட்டிற்கு விரைகின்றனர்.)

பெண் 1 : புலி வாயிலிருந்து மீண்டுவிட்டோம்.

பெண் 2 : அவள் என்ன ஆனாளோ ?

பெண் 3 : அந்தக் காமக் குரங்கிடமிருந்து எப்படித் தப்புவாள் ?

பெண் 1 : இனி கசங்கிய மலர்தான்!.

பெண் 2 : கொடுமை ! கொடுமை! அன்னை பவானிதான் கேட்க வேண்டும்.

பெண் 3 : அவள் அப்பனிடம் சென்று இதை எப்படிச் சொல்வது ?

## காட்சி 3.

இடம்: சிவாஜியின் அரண்மனை.

மாந்தர்: சிவாஜி, முதியவர், பரிவாரங்கள்.

(சாம்பாஜியால் கடத்திச் செல்லப்பட்டவளின் தந்தை, மன்னன் சிவாஜியின் காலைப் பிடித்துக்கொண்டு கதறுகிறார்.)

முதியவர்: அரசே! அரசே!! தங்கள் ஆட்சியிலா இந்த அநீதி? என் ஒரே மகள்......உயிர்போல் காத்து வந்தேன்.

சிவாஜி: (முதியவரைத் தூக்கிய வண்ணம்) அவளுக்கு என்ன நேர்ந்தது?

முதி: எப்படிச் சொல்வேன். என் குடும்ப விளக்கை அணைத்து விட்டார்கள். ஐயோ! இது அடுக்குமா? என் குலச் செல்வம் கொள்ளை போய்விட்டதே!

சிவா: நடந்ததைச் சொல்.

முதி: அவள் வாழ்க்கை இருண்டுவிட்டது. அவளை ஊர் நிந்திக்கும். உலகம் தூற்றும். எவ்வாறு நான் சகிப்பேன்?

சிவா: பதறாதே!

முதி: என் கண்மணியைக் கடத்திச் சென்று விட்டார்கள். அவள் கற்பு இந்நேரம் கொள்ளை போயிருக்கும். உன் ஆட்சியிலே காமுகர்களுக்குக் கேள்வியில்லையா? மானத்தை விழுங்க மாபாதகர்களை

அனுமதித்து விட்டாயா? மராட்டிய சிம்மமே! சொல்! சொல்!!

சிவா: யாரந்தக் காமுகன்? என் தோளிலே வலிமையும், வாளிலே கூர்மையும் இருக்கும்போதா இந்த அக்கிரமம்?

முதி: என் குடியைக் கெடுத்தவன் தங்கள் குமாரன்தான்!

சிவா: சாம்பாஜியா?

முதி: வழிமறித்தானும். வாரி எடுத்தானும்.

சிவா: கொடுமை! கொடுமை!! தில்லித் துருக்கரஞ்சிய துடுக்குத்தனம்.... மீண்டும் நடந்துவிட்டதா? அதுவும் நான் கண்ட மராட்டியத்தில்...... நான் வாளேந்திக் காத்த தருமம் தகர்ந்து விட்டதா? அதுவும் என் மகனுல்... என் வாழ்நாளிலேயே!

மதத்திற்கு மாசு. அரசிற்கு இழிவு. மாற்றலர்க்கு ஏச்சு. சுதந்தர மராட்டியத்திலா இந்தச் சூறை? சாத்பூராவின் சரிதத்திலா இந்தக் கறை? அந்தோ! நாளைக் காவலனுக வேண்டியவன் இன்று காவாலியாகி விட்டான். ஒழுக்கம் அவனுல் உருக்குலைந்து விட்டதே! அவன் என் மகனு? என் மரபிற்கே களங்கமான மாபாதகன்!

சிவா: யாரங்கே?

(ஒரு தளபதி வந்து பணிகிருன்.)

அந்தச் சண்டாளன் இன்னுமா வெளியில் உலவுகின்ருன்?

(முதியவரைப் பார்த்து) பெரியீர்! உன் துயரத்தை எவ்வாறு துடைப்பேன்?

(அமைச்சனைப் பார்த்து) ஜனார்த்தன பந்த்! இளவரசன் என்ற தகுதி இனி அவனுக்கு இல்லை. அந்தப் பழிகாரனைப் பார்க்கவும் என் மனம் இடந்தரவில்லை. இம் முதியவர்க்கு நியாயம் வழங்கு!

## காட்சி 4.

**இடம் :** சாத்பூராவின் சாரல்.

**மாந்தர் :** ஒரு மங்கை.

(சாம்பாஜியால் கற்பழிக்கப்பட்ட அந்த மங்கை வேதனைப் புயலில் சிக்கித் தவிப்புற்று மரணத்தை முத்தமிடச் செல்கிறாள்.—அந்தச் சோகக் குமுறல் பின்னணி செய்கிறது.)

## காட்சி 5.

**இடம் :** நீதிமன்றம்.

**மாந்தர் :** நீதிபதி, கவி, சாம்பாஜி, முதியவர்.

(சாம்பாஜி குற்றவாளிக் கூண்டில் நிற்கிறான். விசாரணை நடைபெறுகிறது.)

**நீதிபதி :** சாம்பாஜி! நீதிக்குத் தலைவணங்கு. நியாயத்திற்குக் கட்டுப்படு. கன்னி ஒருத்தியை வழிமறித்துக் கற்பழித்த குற்றத்திற்காக உன்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

**சாம்பாஜி :** (சாம்பாஜி மௌனமாகக் கவியை நோக்குகின்றான்.)

**கவி :** இளவரசர் தரப்பில் இவ்வழக்கினை மறுக்கின்றேன்.

**நீதி :** அப்படியென்றால் அச் சம்பவம் நடைபெறவில்லையா?

**கவி :** சம்பவம் நடந்தது உண்மை. ஆனால், தங்கள் குற்றச் சாட்டு சரியல்ல.

**நீதி :** எப்படி?

**கவி :** மற்றொருவன் மனைவியை வலிய இழுத்திருந்தால் அது கற்பழித்தலாகும். இளவரசர், கல்யாணமான கன்னியிடம்தான் காதல் புரிந்திருக்கிறார்.

**நீதி :** அவள் விரும்பாத நிலையில் இளவரசர்க்கு அந்த உரிமை ஏது?

கவி: மற்ற மன்னர்கள் விரும்பாத நிலையில் நாம் மராட்டியத் தனியரசு காணவில்லையா?

நீதி: மன்னர்கள் மறுத்தாலும் மக்களுடைய ஆதரவு உண்டு அரசமைக்க. அது வேறு விஷயம். அதனை இங்கே ஆதாரமாகக் காட்ட முடியாது.

கவி: போகட்டும். இந்த நாடு அரசர்க்குச் சொந்தமென்பதை இந் நீதிமன்றம் மறுக்காது என்று நம்புகின்றேன்.

நீதி: உண்மை...........

கவி: நாடு என்றால் மக்களும் பிற செல்வங்களும் உள்ளடங்கியதே!

நீதி: ஆம்.

கவி: அப்படிப் பார்த்தால் அந்த மங்கை அரசுக்கு உடைமையாகிருள். உடைமையை உரியவன் அனுபவிப்பதில் எப்படித் தவருகும்?

நீதி: உரிமைக்குப் பொருள் விபரீதமாகக் கற்பிக்கிருய். பொதுப்பட மக்கள் மீது மன்னற்கு ஆதிக்கம் உண்டு. ஆனல், மனித ஜாதியின் சுய உணர்ச்சிகளையும் பண்பாடுகளையும் சுதந்தரத்தையும் அங்கீகரித்தேயாக வேண்டும். அதனை அழிக்கவோ பறிக்கவோ உரிமை இல்லை...மேலும் இம்மாதிரி வாதங்களை அனுமதியேன். தவறு தவறுதான்!

கவி: தங்கள் முடிவுப்படி தவருக இருந்தாலும், அதற்கும் ஒரு மாற்று இருக்கிறது.

நீதி : சொல்.........

கவி : அரசர்கள், எந்தக் குலத்தில் வேண்டுமானாலும் எத்தனை பேரைவேண்டுமானாலும் மணந்துகொள்ளச் சமூகம் அங்கீகரித்திருக்கிற தல்லவா ?

நீதி: ஆம்.

கவி : அந்த நியதிப்படி தவறியதாகச் சொல்லப்படுகிற சாம்பாஜியையும், தவறுக்கு ஆளானதாகக் காட்டப்படும் அத் தையலையும் தம்பதிகளாக்கி வைத்தால்.........?

நீதி : அதற்கு இருதரப்பிலும் சம்மதம் வேண்டும்.

கவி : இளவரசர் தயார்.

நீதி : பெரியவரே ! தங்கள் கருத்து என்ன ?

முதியவர் : இந்தக் கேள்விக்குக் காலங் கடந்துவிட்டது. எனக்கு நியாயம் கிடைக்க வேண்டும்.

நீதி : இந்த ஏற்பாட்டால் கெடுக்கப்பட்டவள் என்ற கேவலத்திலிருந்தும் தங்கள் மகள் விடுவிக்கப் படுகிறாள். அவள் மானத்திற்கு நேர்ந்த மாசு துடைக்கப் படுகிறது. மீண்டும் அவள் தங்கள் குலவிளக்காக ஒளி செய்ய முடியும்.

முதி : (பெருமூச்சுடன்) நீதி மன்றத்தின் முடிவை ஏற்றுக்கொள்கிறேன்.

கவி : வெற்றி ! வெற்றி !! இளவரசனுக்கு இன்ப உலகில் இணையிலா வெற்றி !!!

(அதுபோது தூதுவன் ஒருவன் வருகிறான்.)

தூதுவன் : நீதி வெல்க !

நீதி : வேந்தரிடமிருந்தா ?

தூது : இல்லை. தலையாரியிட மிருந்து...இதோ அறிக்கை!

நீதி : இந்த வழக்கு சம்பந்தமானதா ?

தூது : ஆம். மானம் பெரிதென்று மாய்ந்து விட்டாள் அம்மங்கை.

முதி : அந்தோ ! மகளே ! நீ மாண்டாயா ? (அலறி ஓடுதல்.)

(நீதிமன்றம் திகைப்படைகிறது.)

நீதி : சாம்பாஜி ! உன் வெற்றி கனவாகி விட்டது. பரிதாபம்! ஒரு கொலைக்குக் காரணமாக இருந்த குற்றம் இப்பொழுது அதிகப்பட்டு விட்டது. தவறை உணர்ந்து தண்டனையைத் தாங்கத்தயாரித்துக்கொள் உன்னை. உன்னால் நேர்ந்த மான நஷ்டத்திற்கு ஈடாக உன் சொத்திலிருந்து அந்த முதியவர்க்கு ஜாகீர் வழங்கச்சிபாரிசு செய்கிறேன். அவளின் சாவுக்குக் காரணமாக உன் செயல் இருந்திருப்பதால் உனக்கு மராட்டிய நியதிப்படி ஆயுள் தண்டனை விதிக்கின்றேன்.

## காட்சி 6.

இடம்: சிவாஜியின் மாளிகை.

மாந்தர்: சிவாஜி, சூரியா பாய்.

(மகன் நிலைமை நினைந்து மனமுடைந்த வேந்தன் சோகத்திலாழ்ந்து இருக்கிறான். சூரியாபாய் அங்கு வருகிறாள். சிவாஜி அவளது வருகையைக் கவனியாமல் பேசுகிறான்.)

**சிவாஜி:** என்னே காலம்! மக்களின் மானத்திற்குப் பாதுகாப்புத் தேவையாகி விட்டது. அரசாளப் பிறந்தவன் ஆயுட் கைதி ஆகிவிட்டான்.

**சூரியாபாய்:** அழிவுப் பாதையில் சென்றதற்குப் பலன்...?

**சிவா:** சூரியா!

**சூரி:** அதையே நினைந்து வருந்திக்கொண்டிருப்பதேன்?

**சிவா:** அவனைப் பெற்ற தந்தையாக இருப்பதால்!

**சூரி:** செல்லங் கொடுத்து வளர்த்து விட்டு, இப்பொழுது சிந்தாகுலப் படுகிறீர்கள்!.

**சிவா:** மகன் தண்டிக்கப்பட்டான் என்று வருந்தவில்லை. மங்காத புகழுக்குப் பங்கம் வந்ததே என்றுதான் (வருந்துகின்றேன்) மயங்குகின்றேன்.

**சூரி:** அன்பே! நிலைமை தங்கள் நினைவைப்போல் இல்லை. பொதுமக்களுக்கு ஒரு நீதி, புதல்வனுக்கு ஒரு நீதி என்றில்லாமல் சரி நீதி வழங்கிய பெருமை அதிகப்பட்

டிருக்கிறது. வீரத்திற்கு வரம்பாக விளங்கிய தாங்கள், இனி நீதிக்கும் தலைமை ஆகிவிட்டீர்கள்.

சிவா : நீ என்ன சொல்லி எவ்வாறு தேற்றினாலும் என் மனப் புயல் அடங்குவதாகக் காணோம்.

சூரி : போர் மேகம் சூழ்ந்து வருகின்ற நேரத்தில் நீங்கள் சோகப் புயலில் சிக்கித் தவிப்பதா ?

சிவா : மலைகுலைந்தாலும் மனங் குலையாதவன்தான் அந்த மங்கையின் மானங் குலைந்ததைக் கேட்ட அதிர்ச்சியில் ஓய்ந்துவிட்டேன்.

சூரி : கழிந்த இரவு மீள்வதில்லை. மாய்ந்த பேரலை மீண்டும் எழுவதில்லை.

சிவா : இந்த உதாரணங்கள் எதற்காக ?

சூரி : நடந்ததைக் குறித்து வருந்தவேண்டாம் என்பதற்காக !

சிவா : மனப்போக்கிற்கு வேறு வழியே தென்படவில்லை.

சூரி : முகலாயப் படைவெள்ளம் தக்காணத்தை நோக்கி வந்துகொண்டிருப்பதை மறந்துவிட்டீர்களா ?

சிவா : அந்த ஆபத்து மராட்டியத்திற்கில்லை. விஜயபுரிக்கு.........

சூரி : விஜயபுரியின் வீழ்ச்சிக்குப் பின்.........?

சிவா : ஆமது நகர், கோல்கொண்டா முதலிய அரசுகள் பாக்கியிருக்கின்றன.

சூரி : மராட்டியத்தின்மேல் கண் வைத்தால்.........?

சிவா : மராட்டியத்தின் மேல் கண் வைத்தால்...? ஆக்ரா வின் கோட்டை கொத்தளங்கள் தகர்த்துத் தரை மட்டமாக்கப்படும். முகலாய மயிலாசனம் பொடிப் பொடியாகிப் புழுதிப் புயலில் கலந்து விடும்.

(அதுபோது வீரன் ஒருவன் வந்து தலை வணங்குகிறான்.)

வீரன் : வேந்தே ! விஜயபுரி தூதுவர் தங்கள் பேட்டிக் காக வந்திருக்கிறார்.

சிவா : அரசாங்க மாளிகைக்கு அழைத்துவா !

## காட்சி 7.

இடம் : அரசாங்க மாளிகை.

மாந்தர் : சிவாஜி, தூதுவர்.

(சிவாஜியும் தூதுவரும் சந்திக்கின்றனர்.)

தூதுவர் : வாழ்க மராட்டியம் ! வளர்க நின் கொற்றம்!

சிவாஜி : நன்றி ! சுல்தான் நலன்தானே !

தூது : அண்டையில் மராட்டியமிருக்கும் போது நலத் துக்கும் வளத்துக்கும் ஏது குறை ?

சிவா : வந்துள்ள நோக்கம் யாதோ ?

தூது : சுல்தான் தங்கள் தோழமையை விரும்புகின்றார்.

சிவா : பன்னெடுங் காலமாகக் கொண்டிருந்த பகைமை .?

தூது : அதனை மறந்து புது உறவு கோருகிறார்.

சிவா: இவ்வளவு பெரிய மாற்றத்திற்குக் காரணம்?

தூது: அனுபவ முதிர்ச்சி!

சிவா: அனுபவ முதிர்ச்சி.........! (நகைத்து) பாய்ந்து வரும் முகலாய சிம்மத்தோடு மராட்டிய சிம்மத்தை மோத விடுதற்கான சூழ்ச்சியல்லவா?

தூது: அல்ல. மராட்டியத்தையும் விஜயபுரியையும் காப்பாற்றுவதற்கான திட்டம்.

சிவா: இது தந்திரமான காரணம்.

தூது: சத்திரபதி! சாத்பூராவின் காற்றைத்தான் நாங்களும் பருகுகின்ருேம். நருமதையின் நீரைத்தான் நீங்களும் அருந்துகின்றீர்கள். தக்காண மண்ணில் தான் இருவரும் பிறந்திருக்கின்ருேம். அப்படியிருக்க அண்டை நாடுகளுடன் நாம் பகைத்துக்கொண்டு, ஆக்கிராவிலிருந்து வரும் முகலாயர்க்கு இடங்கொடுப்பதா? விஜயபுரி வீழ்ந்தால் மராட்டியத்தின் வலிமைக்குப் பழுதில்லையா? வேந்தே! விஜயபுரி இன்று உங்களுக்கு வேற்றரசு! ஆனல், அது உங்கள் தந்தையின் வீரத்தால் தலை நிமிர்ந்து நின்ற நாடு என்பதை மறந்து விடாதீர்கள். எங்கள் சுல்தான் எதிரியோடு மோத விடுவதற்காகத் தோழமையைக் கோரவில்லை. பொது' எதிரியை முறியடிக்கத் தோள் கொடுக்க வேண்டுகிருர்.

சிவா: தூதுவ! உன் திறம் பாராட்டுதற்குரியது. நான் உளம் தளர்ந்திருந்த நேரத்தில் வந்து உறுதியும் புது உறவும் தந்த உனக்கு என் நன்றி! எனது அன்பிற்கு அறிகுறியாக இதனை ஏற்றுக்கொள்! (முத்துமாலை வழங்குகிறன்.)

## காட்சி 8.

இடம்: ஒரு சாவடி.

மாந்தர்: கவிகுலேஷ், வீரன் ஒருவன்.

(கையாளான ஒரு வீரனும் கவியும் சந்திக்கின்றனர்.)

கவிகுலேஷ்: இளவரசர் என்ன சொன்னர்?

வீரன்: எல்லாம் இதில் எழுதியிருப்பதாகச் சொன்னர்.

கவி: ரொம்ப நன்றி!

வீர: கவிராஜ்! நான் எளியவன். என்னைக் கெடுத்து விடாதீர்கள்.

கவி: எதிர்காலத்தில் உனக்குப் பெரிய வாழ்வு காத்திருக்கிறதடா!

வீர: இந்தக் காலத்தில் விளையக்கூடிய ஆபத்தை மறந்து விட்டீர்களே!

கவி: இந்தப் பீடிகையெல்லாம் எதற்காக...? கைநிறையப் பொன்னும் மணியும் தருகிறேன்.

வீர: அதில்தானே ஐயா ஆபத்திருக்கிறது. நானே ஓர் ஏழைக் காவலன். என் கையிலே ஏராளமாகத் தங்க மொகராக்களைப் பார்த்தால் மற்றவர்கள் சந்தேகப் படமாட்டார்களா? தரித்திரப்பட்ட என் தகுதிக்கு மேல் முத்தும் மணியும் என் மக்கள் அணிந்தால், அக்கம் பக்கத்தார் யூகம் செய்வார்களே! அரசாங்க கவனத்திற்கு வந்தால் களவாடியதோ (என்று

தானே) கைக்கூலி வாங்கியதோ என்றுதானே முடிவு கட்டுவார்கள்...........அப்போது என் கதி?

**கவி:** அட மடையா! விளம்பரத்தை விரும்புபவர்கள் அல்லவா அம்பலமாக வைத்துக் கொள்வார்கள்! அகப்பட்டதை ஒளித்து மறைத்துத்தான் சேர்க்க வேண்டும்.

**வீர:** அப்போதைக்கு உதவாததை அஞ்சிப் பயந்து சேர்த்தாக வேண்டியதென்ன இருக்கிறது? இனி என்னை இந்த வேலைக்கு எதிர்பார்க்காதீர்கள்.

**கவி:** இந்த வேலை எதிர்கால ராஜ விசுவாச மடா!

**வீர:** அது இக்கால அரசுக்குத் துரோகமாக இருக்கிறதே!

(தந்த மாலையைத் திருப்பித் தருகிறான். செல்கிறான்.)

**கவி:** (பெருமூச்சுடன்) மாவலப் பாமரனிடம் இவ்வளவு மறுமலர்ச்சியா?

(கடிதத்தைப் படிக்கின்றான்.)

"குலேஷ்! என் கண்ணாகவும், காதாகவும், எண்ணமாகவும் வெளியில் நீ யிருக்கும்போது எனக்கு என்ன குறை? எப்படியும் தப்ப வழி தேடிக் கொண்டிருப்பாய் என்ற நம்பிக்கையில் தான் கவலையற்றிருக்கிறேன். காலத்தைத் தாழ விடாதே! சந்தர்ப்பத்தில் உன் சாகசத்தைப் பயன்படுத்து. வெற்றி நிச்சயம்!

இங்ஙனம்,
உன்
சாம்பாஜி"

**கவி:** இனிக் கூலிப் பசங்களை நம்பிப் பயனில்லை. நாமுண்டு! நம் மூளையுண்டு!!

## காட்சி 9.

**இடம் :** சிறை.

**மாந்தர் :** காவலர், கவிகுலேஷ், சாம்பாஜி.

(சாம்பாஜி அடைக்கப்பட்டுள்ள சிறையை வீரர் இருவர் காவல் புரிந்து நிற்கின்றனர். அங்கு, மங்கை வேடத்தில் கவிகுலேஷ் பாட்டும் புலம்பலுமாக உளறிக்கொண்டு வருகிறான்.)

**வீரன் 1 :** என்னம்மா! பாட்டைப் பாதியில் நிறுத்திவிட்டு விரைக்க விரைக்கப் பார்க்கிறே!

**கவிகுலேஷ் :** (செறுமலுடன்) இந்தப் பாழாப்போன சிவாஜி சண்டை சண்டையென்று பம்பை அடிக்கிறதும், கொம்பை ஊதுறதும், அதைக் கேட்டு இந்தக் குடியானப் பசங்களெல்லாம் குதிச்சுக்கிட்டுக் கிளம்பறதை நினைச்சா எனக்கு என்னமா வருது?

**வீரன் 2 :** இது என்ன புதுமாதிரியாப் புலம்புது.

**கவி :** கட்ண அண்ணேக்கே கிளம்பி விட்டான். அவனைத் தேடித் தேடி என் காலெல்லாம் தேஞ்சு போச்சு. எம் மக தவிக்கிற தவிப்பு சகிக்கல.

**வீரன் 1:** ஓஹோ! மருமகனைத் தேடுகிற மாமியாரா?

**கவி :** உன் குரலைக்கேட்டால் என் மருமகன் குரல் மாதிரியேதான் இருக்கு.........

**வீரன் 2 :** அதிர்ஷ்டம் அண்ணனைத் தேடிக் கொண்டல்ல வருகுது.

கவி : உன் முறுக்கு மீசையைப் பார்த்தால் அவன் ஜாடை அப்படியே இருக்குதே !

வீரன் 1 : தம்பி! அதிர்ஷ்டம் உன் பக்கம் திரும்பி விட்டதடா !

வீரன் 2 : உன் மகள் எப்படி யிருப்பாள் ?

கவி : என்னைப் பார்த்தால் என் மகளைப் பார்க்க வேண்டுமா ?

வீரன் 1 : இப்ப அவள் எங்கே யிருக்கிருள் ?

வீரன் 2 : சொல்லுங்க அத்த !

கவி : பக்கத்துச் சாவடியில் தங்க வைத்திருக்கிறேன். அவ பார்த்தாள்ளு இந்நேரம் அடையாளம் கண்டு பிடித்திருப்பாள்.

வீரன் 1 : அவளை இங்கே அழைத்துக் கொண்டுதான் வாயேன்...........

கவி : அவ ரொம்ப வெட்கப் பட்டவள். நீங்க வேண்டு மானல் வந்து பாருங்க.

வீரன் 1 : காவல்..............?

கவி : ஒருத்தொருத்தராய் வந்தால்...?

வீரன் 2 : அட தம்பீ! நீ இரு. நான் போய்ப் பார்த்து விட்டு வருகின்றேன்.

வீரன் 1 : இல்லே. நான்தான் முதலில்...

வீரன் 2 : முடியாது. நான்தான் முதலில்...

வீரன் 1 : மோசக்காரா ! அவளை நீ தட்டிக்கொண்டு போகவா பார்க்கிறாய் ?

வீரன் 2 : அட அற்பப் பயலே! அந்தப் பேராசை உனக்குத்தானடா !

(இருவருக்கும் வாய் முற்றிக் கைச் சண்டையாக மாறுகிறது. சிறைச்சாவி நழுவிக் கீழே விழுகிறது. கவி அதனை எடுத்து சிறையைத் திறந்துவிட சாம்பாஜி வெளியேறுகின்றான். காவலர்கள் உள்ளே பூட்டப்படுகின்றனர். கவியின் பெண் வேஷம் கலைகிறது.)

## காட்சி 10.

இடம் : காட்டுப் பாதை.

மாந்தர் : கவிகுலேஷ், சாம்பாஜி.

(கவியும் சாம்பாஜியும் தப்பிச் செல்லு கின்றனர்.)

கவிகுலேஷ் : இளவரசே ! இப்படிச் சென்றுகொண்டே யிருந்தால்......?

சாம்பாஜி : வேஷத்தை மாற்றிக்கொண்டு எங்காவது பதுங்குவோம்.

கவி : மராட்டியத்தில் எங்கு தங்கினாலும் பிடித்து விடுவார்கள்.

சாம் : அப்படியா ?

கவி : மன்னன் சிவாஜியிடம் மாவலர்களுக்கு அவ்வளவு பிரேமை.

சாம் : பின் எங்கு செல்லலாம் என நினைக்கின்றாய் ?

கவி : நருமதைக்கப்பால் முகலாயர் தண்டு இறங்கி யிருக்கின்றாராம்.

சாம் : அவர்களிடமா ?

கவி : ஏன் அவர்கள் தங்கள் தந்தையின் பகைஞர் அல்லவா ? நிச்சயம் வரவேற்பார்கள்.

சாம் : பார்ப்போம்.

## காட்சி 11.

இடம் : வீதி.

மாந்தர் : பொது மக்கள்.

(வீரர்கள் பரபரப்புடன் அங்குமிங்கும் ஓடுகின்றனர். சாம்பாஜி தப்பிவிட்டார் என்ற குரல்கள் எதிரொலிக்கின்றன.)

இளைஞன் : என்ன தாத்தா! இளவரசர் தப்பி விட்டாராம்.

முதியவர் : காவலாளிகள் ஏமாந்திருப்பர்.

இளைஞன் : புலிக்குப் பிறந்ததல்லவா! பூனையா அடங்கிக் கிடக்க !

முதியவர் : தம்பி ! உன் உபமானம் சரியல்ல. நல்ல மரத்தில் புல்லுருவி என்று சொல்!

இளைஞன் : தாத்தா! வாயில் வந்தபடி பேசாதீர்கள்.

முதியவர் : வாயில் வந்ததல்ல! தம்பி ! வயிற்றெரிச்சலைச் சொல்லுகிறேன். மராட்டிய மன்னர் பரம்பரைக்கே அவர் மாசு. அப்பன் அமைத்த அரசை இவன் குலைத்து விடுவானோ என்று அஞ்சவேண்டி யிருக்கிறது.

(பேசிக்கொண்டே செல்லுகின்றனர்.)

## காட்சி 12.

இடம் : முகலாயர் பாசறை.

மாந்தர் : திலவர்கான், ஒற்றன்.

(திலவர்கான் தனது கூடாரத்தில் ஹூக்கா குடித்த வண்ணம் ஆச்சரியத்தோடு ஒற்றன் கூறுவதைக் கேட்கிருன்.)

**திலவர்கான் :** என்ன ?...... மராட்டிய இளவரசனு ?

**ஒற்றன் :** ஆம்; உகூர்! சாம்பாஜிதான் வெள்ளைக் கொடி ஏந்தி வருகிருர்.

**திலவர் :** என்ருல் நம்பவே முடியவில்லை. எதிரே சிவாஜி போர்க்கொடி உயர்த்திருக்கிருர். மகன் நம்மிடம் மண்டியிட வருகிருனு ?

**ஒற்றன் :** தந்தைக்கும் மகனுக்கும் சச்சரவாக இருக்கலாம்.

**திலவர் :** சதியாக இருந்தால்......... ?

**ஒற்றன் :** தகுந்த நடவடிக்கை எடுப்போம்.

**திலவர் :** ம்......... நல்லது. அழைத்துவா பாசறைக்கு. வரவேற்பெல்லாம் கொஞ்சம் பலமாகவே நடக்கட்டும்.

## காட்சி 13.

இடம் : முகலாயர் பாசறை.

மாந்தர் : திலவர்கான், சாம்பாஜி, கவிகுலேஷ் முதலியோர்.

(சாம்பாஜியும், குலேஷூம் திலவருக்கு அருகே வீற்றிருக்கின்றனர். விருந்தாளியைப் பெருமை செய்யும் முறையில் நடனம் நடைபெறுகிறது.)

## காட்சி 14.

இடம் : ஔரங்கசீப்பின் மாளிகை.

மாந்தர் : ஔரங்கசீப், உந்நிசா.

(உந்நிசா சாரங்கியும் கையுமாக இசை அலைகளை இனிய கானத்தோடு எழுப்பிக் கொண்டிருக்கிறாள். இசையை வெறுத்த ஔரங்கசீப் கடுகடுத்த முகத்தோடு அங்கு வருகிறான்.)

**பாதுஷா :** உந்நீஸ்!...இது என்ன காது குடைச்சல்...? உனக்கு வேறு வேலை இல்லையா ?

**உந்நிசா :** அப்பா...தங்களுக்குச் சங்கீதம் பிடிக்க வில்லை என்பதற்காக இந்தக் கருவியை இப்படி அறுத்தறுத்துத் தள்ளுகிறேன். (மீட்டிக்கொண்டே)

பாதுஷா: கரகர...சளசள...என்று சத்தத்தை எழுப்புவதற்குப் பெயர் சங்கீதமாம்...சங்கீதம்!

உந்நிசா: அப்பா! சர்க்கரை கசப்பது வாய்க்குறை. சங்கீதம் கரகரப்பது காதுக் குறை!

பாதுஷா: உந்நீஸ்! நீ மிகவும் குறும்புக்காரியாகி விட்டாய்.

உந்நிசா: அப்பா! இப்பொழுதுதானே குரான் படித்துக் கொண்டிருந்தீர்கள். அதற்குள்ளாக உங்கள் கோபத்தைக் கிளறிவிட்டது யார்?

பாதுஷா: பார்...இந்த நிருபத்தை! (பல்லைக் கடித்தல்)

உந்நிசா: (பார்த்தபடி) தளபதி திலவரிட மிருந்தல்லவா வந்திருக்கிறது.

பாதுஷா: ஆம்...ஒரு எலிக்குஞ்சை நம்பி இரண்டாவது போர் முனை துவக்க யோசனை கேட்கிறான்.

உந்நிசா: எலிக்குஞ்சா?...யாரைச் சொல்லுகிறீர்கள்.

பாதுஷா: அந்த மலை எலி சிவாஜி பெற்ற தறுதலையைத் தான்!

உந்நிசா: (கடிதத்தைப் படிக்கிறாள்)........மகனையும், தந்தையையும் மோத விட்டே, மராட்டியத்தை அழித்து விடலாமென்று.........

பாதுஷா: பகற்கனவு காண்கின்றான்...அப்பனுக் கெதிராக மகன் தலைமையில் படை அனுப்புவதாம்!

உந்நிசா: ஏன், அரச குடும்பங்களில் அது சகஜந் தானே?

பாதுஷா: அநுபவசாலி போல பேச ஆசைப் படுகிறுய் உந்நீஸ்......

உந்நிசா: ஆதாரத்திற்கு வேறு சரித்திரமா தேவை?...... தாங்களும்......தாத்தாவும்......!

பாதுஷா: துடுக்குக்காரப் பெண்ணே! இந்நேரம் இந்த வார்த்தை வேறு யாராவது சொல்லி இருந்தால்...?

உந்நிசா: அவர்கள் நாக்கு துண்டிக்கப்பட்டிருக்கும்.

பாதுஷா: சரி. வருகிறேன்; நிருபத்தைக் கொடு.

உந்நிசா: என்ன உத்தரவு போடப்போகிறீர்கள்?

பாதுஷா: அவசியம் உனக்குச் சொல்லவேண்டுமோ? இது அரசியல்!

உந்நிசா: பாதுஷாவின் ஆசைமகள் உந்நிசுக்குத் தெரியாத ரகசியம் எதுவுமே இருக்கக்கூடாது.

பாதுஷா: பாய்சாகேப், ஆக்ஞை.

உந்நிசா: அல்லாஹு அக்பர்.

## காட்சி 15.

இடம் : மொகலாயர் பாசறை.

மாந்தர் : திலவர்கான், அலங்காரவல்லி.

(சயனக் கூடாரத்தில் படுக்கைத் திண்டில் சாய்ந்த வண்ணம் திலவர் வீற்றிருக்கிறார். அலங்காரவல்லி அவனுக்கு இன்பமூட்டுவதற்காக நழுவிய ஆடையுடன் நடனம் ஆடுகிறாள்.)

**திலவர்கான் :** பியாரி...போதும். ஆட்டத்தை நிறுத்து. (போதையுடன்.)

**அலங்காரவல்லி :** ஏன், சலித்து விட்டீர்களா ? (அபிநயத்தோடு)

**திலவர் :** உன் சிற்றிடை சித்திரப் புழுப்போல் நெளிவதைக் கண்டு அஞ்சுகிறேன் ஒடிந்து விடுமோ என்று......

**அலங் :** நன்ருக வர்ணிக்கின்றீர்களே !

**திலவர் :** உன் சரசத்திலே பிறந்ததுதான் அந்தச் சக்தி...

**அலங் :** உங்கள் சாகசத்திற்குமுன் என் சரசம் எம்மாத்திரம்?

**திலவர் :** சாகசம் !...உங்களினத்திற்கே உரிய ஆயுதம். அதை உபயோகிக்க ஆண்களுக்குத் தெரியாது.

**அலங் :** தெரியாமலா, உலகம் தெரியாத பேதைகளை, உங்கள் ஜனுனுக்களின் அலங்காரப் பதுமைகளாக்கி வைத்திருக்கிறீர்கள்.

திலவர்: எத்தனை பேரை வசப்படுத்தி வைத்தாலும் எவளாவது ஒருத்தியிடம் இதயம் முழுவதையும் கொடுத்துவிட்டு......அவள் கட்டிலறைப் புழுவாகத் தான் வேண்டியிருக்கிறது.

அலங்: அப்படித் தங்களைக் கட்டுப் படுத்திவைத்திருக்கும் காமவல்லி யாரோ?

திலவர்: இது சொல்லியா தெரிய வேண்டும்? போர் புரிய வந்த இடத்திலும் போகந்தர வந்திருக்கிற நீதான்!

அலங்: இது வெறும் புகழ்ச்சி.

திலவர்: அல்ல...அவ்வளவும் உண்மை. படுகளத்தில் நான் தலைவன் ஆனாலும் படுக்கை யறையில் தலைமை உனக்குத்தான்.

அலங்: இந்தப் பெருமை முன்னம் யார்யாருக்குக் கிடைத்திருந்ததோ?

திலவர்: அத்தனை பேரையும் வென்று விட்ட அழகு ராணி நீதான். வா என்னருகே. எடு அந்த இன்ப ரசத்தை. (பக்கத்து மேசையிலிருந்த பழரசக் கோப்பையை எடுக்கிறாள். அதன் அருகே நிருபம் ஒன்றிருக்கிறது—)

அலங்: இது என்ன?......இன்ப ரகசியங்கள் எழுதப் பட்ட ஏடோ?

திலவர்: பாதுஷா அனுப்பிய பதில்.

(கோப்பையை முத்தமிடுகிறான்.)

## காட்சி 16.

இடம்: மொகலாயர் பாசறையில் ஒரு கூடாரம்.

மாந்தர்: சாம்பாஜி, குலேஷ், அலங்காரவல்லி.

(சாம்பாஜியும், கவியும் தனித்திருக்கின்றனர். நள்ளிரவு ஆகியும் கவி தூங்காமல் ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறான். படுக்கையில் புரண்டு கொண்டிருக்கிற சாம்பாஜி விழித்துக் கொள்கிறான்.)

**சாம்பாஜி:** குலேஷ்! உனக்குத் தூக்கம் வரவில்லையா? ஏன் மெழுகு திரிகளை எரித்துக்கொண்டிருக்கிறாய்?

**கவிகுலேஷ்:** ரசமான கற்பனை!

**சாம்:** பனையேடுகளைப் பாழாக்குகிறேன் என்று சொல்.

**கவி:** ரசனை தெரியாத வறட்டு மூளைக்கு அப்படித்தான் தோன்றும்!

**சாம்:** எங்கே...உன் அற்புத மூளையில் உதித்த கற்பனையைப் படி கேட்கலாம்.

**கவி:** நன்றாகக் கேள். கொள்ளையின்பம் குலவும் இந்தக் கவிதைகளைக் கேட்க இரண்டு செவிகள் போதாது இளவரசே!

(பாடலைப் படிக்கிறான். 'வருக, வருக' என்று பாடல் முடிகிறது.)

**சாம் :** வரவேற்பு பலமாகத்தானிருக்கிறது. ஆனல் நீ வர்ணித்திருக்கின்ற வனிதாமணி வந்தருளவில்லே.

(அதுசமயம் அங்கே அலங்காரி வந்து சேருகிருள்.)

**கவி :** (ஆச்சரியத்தோடு) அரசே !

**சாம் :** அடே ! உன் பாட்டு பலித்து விட்டதடா!

**கவி :** தேவி ! பக்தர்கள் இருவர் இருக்கிருேம். பர தேவதை நீ ஒருத்தி வந்திருக்கிருயே !

**அலங் :** அட, அறிவுப் பஞ்சமே! உன் அசட்டுப் பேச்சை நிறுத்து. சாம்பாஜி ! இதனைப் படித்துப் பார். (நிரு பத்தைத் தருகிருள்.)

(சாம்பாஜி வாங்கிப் படிக்கிருர்.)

"திலவர் ! தந்தையை வஞ்சித்து வந்த பஞ்சையின் நேசம் பெரிதல்ல. அந்த வஞ்சகன் நமக்குப் பரம வைரி. அரசியலில் மட்டுமல்ல; மதத்துறையிலும் கூட! அவனுக்கு நீ தஞ்ச மளித்தது தவறு. வலியச் சிக்கிய புலியைக் கூண்டிலடைத்து அனுப்பத் தாமதிக்காதே.

பாதுஷா"

**சாம் :** (பயத்தோடு) குலேஷ் !

**கவி :** (நடுநடுங்கி) பேராபத்தில் சிக்கிக்கொண்டோம்.

**அலங் :** (ஏளனமாக) புத்தியிருந்தால் பிழைத்துக் கொள்ளலாம்.

கவி: (அலங்காரியை) நீ......நீ......(வாய் குழறுகிறது.)

சாம்: யார்? (அதட்டல்)

அலங்: திலவரின் ஆசை நாயகி......

சாம்: அப்படியா? எங்கள் மீது கருணை பிறந்த காரணம்?

அலங்: நான் அந்த இஸ்லாமிய வீரனுக்கு இன்பக் கருவி தான். ஆனால், நானும் ஓர் இந்துப் பெண். அந்தப் பாசத்தால் வந்து எச்சரித்தேன். வருகிறேன்.

(நிருபத்தை எடுத்துக்கொண்டு வேகமாகச் சென்று விடுகிறாள். சாம்பாஜியும், கவியும் ஒருவரை ஒருவர் பார்த்து விழிக்கின்றனர்.)

## காட்சி 17.

இடம்: விஜயபுரி பாசறை.

மாந்தர்: சுல்தான், சிவாஜி, காவலன், சாம்பாஜி, கவிகுலேஷ்.

(சுல்தானும் சிவாஜியும் சதுரங்கமாடிக் கொண்டிருக்கின்றனர்.)

சுல்தான்: இதோ உங்கள் துருப்புத் தொலைந்தது.

சிவாஜி: ஒரு துருப்புப் போனால் உங்கள் குதிரை மூன்றுக்கு மோசம்.

சுல்தா: உம்......இப்பொழுது நகர்த்துங்கள்.

சிவா: இதோ ஒரு வெட்டு.

(அதுபோது பாசறைக் காவலன் உள்ளே வந்து பணிகிறான்.)

**காவலன்:** வேந்தே! இருவர் நம் பாசறையை நோக்கி வருகின்றனர். அவர்களை மொகலாயர்கள் பின் தொடர்கின்றனர்.

**சிவா:** யாரது? நம் உளவுப் படைகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன?

**சுல்தா:** யாராயிருந்தாலும், காப்பாற்றுங்கள் முதலில்!

**சிவா:** சரி. ஆட்டத்தைக் கவனிப்போம்.

**சுல்தா:** சபாஷ்......வெற்றி என்பக்கந்தான்! (காய் நகர்த்தியபடி)

(அதுசமயம் சாம்பாஜியும், கவியும் அபயம், அபயமென்று வந்து பணிகின்றனர். சிவாஜி திடுக்குற்றுப் பார்க்கிறான்.)

**சிவா:** என்ன? மாற்றான் காலில் மண்டியிட்ட மாமிசப் பிண்டமே, நீயா? அவன் மாபாதகத்துக்குத் துணை நிற்கும் காதகனே, நீயுமா? மகத்தான தியாகங்களைச் செய்து மராட்டியத்தில் மறுமலர்ச்சியைக் கண்டேன். அதன் மானத்தைக் கெடுக்க ஏன் பிறந்தாய் நீ? மாவலர் தம் வீரத்தைக் குழைத்துக் கட்டப் பட்டதடா கோட்டைகள். ஒவ்வொன்றும், அதனைத் தகர்க்கும் தறுதலையானதேன் நீ? ஆற்றலால் அரசு அமைத்தேன்; அயலரசுகளால் அதனைத் தடுக்க முடியவில்லை. அப்சல்கான், சேஷ்டகான், ஜஸ்வந்தன், சித்திஜோகர் முதலிய சூராதி சூரர்களெல்லாம் தோற்றார்கள் என் சுதந்தரத்தைப் பறிக்க முடியாமல்! அதனை அழிக்கும் துரோகியாக நீ

முளைத்து விட்டாயே. உன் உடலிலே மராட்டிய ரத்தம் ஓடவில்லையா? வீரத்தையும், மானத்தையும் விற்று விட்டாயா? அட......குலத் துரோகி! உன்னை மகனென்று நினைக்கும்போது என் மார்பு வெடித்து விடும் போலிருக்கிறதடா! என் முன் நில்லாதே! போ. மராட்டிய மண்ணை மிதிக்க உனக்குத் தகுதி யில்லை.

(சாம்பாஜி தலைகவிழ்ந்து நிற்கிறான்.)

சுல்தா: வேந்தே! இளமையின் துடிப்பால் இவ்வாறெல் லாம் நடந்து விட்டான். அதனைப் பாராட்டாதீர்கள்.

சாம்: மன்னித்தருளுங்கள். அன்னை பவானி மீது ஆணை. இனித் தவறு செய்யமாட்டேன்.

கவி: என்னை எதுவேண்டுமானாலும் செய்யுங்கள். இள வரசனுக்குக் கருணை காட்டுங்கள். (மண்டி இடல்.)

சுல்தா: அரசே! குற்றம் பார்க்கில் சுற்றமேது? இனி சாம்பாஜியின் ஒழுங்கிற்கு நான் உறுதி தரு கிறேன்.

சிவா: சுல்தானின் சொல்லிற்கு மதிப்புத் தரவேண்டி யிருக்கிறது.

சுல்தா: பொறுப்புகளைக் கொடுத்தால் உருப்படுவான் என்று நம்புகிறேன். அவனை ஒரு கோட்டைக்கு அதிபதியாக அனுப்பி வையுங்கள்.

சிவா: தங்கள் விருப்பப்படி யாகட்டும். பனகலக் கோட்டையின் தலைமைப் பதவி காலியாக இருக் கிறது. போகச் சொல்லுங்கள். இம்மணி முடிமீது அவனுக்கு ஆசையிருந்தால் அங்கே மக்களின் நம்பிக் கைக்கு உரியவனாக நடந்து கொள்ளட்டும்.

## காட்சி 18.

இடம் : பனகலம்.

மாந்தர் : சாம்பாஜி, கவி, பொதுமக்கள்.

(கோட்டைத் தலைவனுக்குரிய விருதுக ளோடு மரியாதை செய்து, அதிகாரிகள் பேரொடு பாண்டுடன் எதிர் கொண்டழைக் கின்றனர் சாம்பாஜியை.)

## காட்சி 19.

இடம் : வழிநடை.

மாந்தர் : முதியவர். (சாம்பாஜியால் கெடுக்கப் பட்டவளின் தந்தை.)

(சாம்பாஜிக்கு நடக்கும் மரியாதைகளைக் கண்டு அருவருப்பும், ஆத்திரமும் அடைகிறார் முதியவர்.)

**முதியவர் :** காமக் கள்ளனுக்குக் காவலன் பதவியா? கொட்டு முழக்குடன் வரவேற்பு......இவன் ஊராள ஆரம்பித்தால் உண்மை குடியோடிப் போகும். இன்று அவனுக்கு கோட்டை தலைமை என்றால் நாளை அவன் இந்நாட்டுக்கு அரசன். அக்ரமம்! (பார்க் கிறேன்.) சூரியபாய்க்குத் தூபம் போட்டு அவன் வாழ்வைச் சூனியமாக்குகிறேன். (புறப்படுகிறான்.)

## காட்சி 20.

இடம் : சிவாஜியின் அந்தப்புரம்.
மாந்தர் : சிவாஜி, சூரியாபாய்.

(போர்க்களத்தினின்றும் மீண்ட சிவாஜிக்குச் சூரியாபாய் உபசாரணை செய்கிறாள்.)

சூரியாபாய் : அன்பே ! ஓய்வும் உல்லாசமும் உங்களுக்கு அமையவே இல்லை.

சிவாஜி : அதை நினைத்திருந்தால் இந்த அரசு ஏது? சூரியா.

சூரியாபாய் : அரசு அமைத்த பிறகும் கட்கமும் கையுமாகத்தானே காலத்தைக் கடத்தி வருகிறீர்கள்.

சிவாஜி : எல்லாம் அமைத்த அரசை நிலைநிறுத்தி வைக்கத்தான்!

சூரியாபாய் : எத்தனை காலத்துக்கு நீங்களே கட்டிக் காக்க முடியும்?

சிவாஜி : ஏன் ? நம் மக்களுக்கு அந்த ஆற்றல் இருக்காதா ?

சூரியாபாய் : நல்ல பிள்ளைகள் ! மூத்தது ஒன்றுக்கும் உதவாத மோழை.

சிவாஜி : கவலைப்படாதே: அவனைத் திருத்தும் பொறுப்பை அறிஞர் ஜனார்த்தனம் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

சூரியாபாய் : இளையவனுக்கோ இன்னும் ஊட்டுப் பல் கூடத் தேயவில்லை.

சிவாஜி : அவனுக்கு அறிவையும் ஆற்றலையும் அன்போடு குழைத்து ஊட்டி விடுவாய் என்ற நம்பிக்கை இருக்கிறது.

சூரியாபாய் : என்ன இருந்தாலும் எதிர்காலத்தில் பூசல் ஏற்படாமலிருக்க ஒரு ஏற்பாடு செய்து வைக்க வேண்டும்.

சிவாஜி : என்ன செய்ய நினைக்கிறாய் ?

சூரியாபாய் : இராஜாராமனுக்கு இளவரசுப் பட்டம் கட்டவேண்டும்.

சிவாஜி : மூத்தவனிருக்க இளையவனுக்கு முடியா ?

சூரியாபாய் : இன்னுமா அவனுக்கு அந்த உரிமை இருக்கிறது ?

சிவாஜி : அப்படிச் சொல்லாதே சூரியா.

சூரியாபாய் : சொந்த அரசுக்கே துரோகம் நினைத்த அவன் மன்னனாவதை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

சிவாஜி : அதைப்பற்றி இப்பொழுது ஏன் விவாதம் ?

சூரியாபாய் : இராஜாராமனுக்கே அரசனாவதற்கான தகுதிகள் யாவும் இருக்கின்றன என்பதை நீங்கள் மறுக்க முடியாது.

சிவாஜி : இருந்தாலும் நீ சொல்லுவது ஓரவஞ்சகம். அதை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன்.

சூரியாபாய் : பின் என்னதான் நினைத்திருக்கிறீர்கள் ?

சிவாஜி : இரண்டாகப் பிரித்து இருவருக்கும் முடி சூட்டுவோம்.

சூரியாபாய் : அரசே ! அது சரியல்ல. சாம்பாஜி முடி சூடினுல் மராட்டியத்திலே இருள் சூழ்ந்துவிடும். பிடி மண்கூட மிஞ்சாது. தாங்கள் உயர்த்திய வெற்றிக் கொடி வீழ்த்தப்பட்டு விடும். நான் அதற்குச் சம்மதி யேன்.

சிவாஜி : சூரியா ! பொறுத்திரு. காலம் எல்லாச் சிக்க லேயும் தவிர்த்து விடும்.

## காட்சி 21.

இடம் : சிவாஜியின் மாளிகைப்புரம்.
மாந்தர் : சூரியாபாய், சேடி, குறத்தி.

(வீதியில் மலேக் குறத்தி குறம் பாடிக் கொண்டு வருகிருள்.)

### குறம்

(அதனே அரசிகேட்டு சிந்தனேயில் ஆழ்கிருள். சேடி குறத்தியை அழைத்து வருகிருள் அந்தப்புரத்திற்கு.)

சேடி : ஏ ! குறத்தி ! சரியாகப் பார்த்துச் சொல். சன்மானம் நிறையக் கிடைக்கும்.

குறத்தி : (அரசியின் குறையை யூகம் செய்து பாடுகிருள்.)

சேடி : மனக் குறையைப் பாடி விட்டாய். அது தீர மார்க்கம்...?

(குறத்தி, அதற்கான மார்க்கங்கள் மருந்து, மந்திரம், மாயமெனப் பாடுகிருள்.)

அரசி: உனக்குத் தெரிந்ததெல்லாம் சொன்னால்...?

சேடி: செய்யக் கூடியது என்னவென்று சொல்.

(குறத்தி பெண்களுக்குரிய மோகனஸ்திரம், 'மாயம்', அதனைப் பிரயோகித்தலைப் பற்றிப் பாடுகிறாள்.)

அரசி: மாயம்! அந்த மோகனக் கட்டு அவரிடம் செல்லாது. அப்படி இருந்தால் கோட்டைக்கொரு குமரியல்லவா கோலோச்சிக் கொண்டிருப்பாள்.

(குறத்தி மந்திரத்தின் அருமை, பெருமைகளைப் பாடுகிறாள்.)

அரசி: அதுவும் பயனில்லை. நீ சொல்லுகிற கடம், பூஜை, ஜெப தபமெல்லாம் நம் எண்ணத்தை அம்பலமாக்கிவிடும்.

சேடி: இரகசியத்தில் சாதிக்கக் கூடியதாகச் சொல்.

(குறத்தி வசிய மருந்து போடுதல் பற்றிப் பாடுகிறாள்.)

அரசி: இது சரி.

சேடி: நிச்சயம் வெற்றிதான்.

(குறத்திக்கு அரசி பரிசு தந்து அனுப்புதல்.)

## காட்சி 22.

இடம் : ஒரு மாளிகை.
மாந்தர் : சிர்கே, தானுஜி.

(தானுஜி சிர்கேயை வரவேற்கிருர்.)

தானுஜி : சிர்கே ! வாருங்கள், வாருங்கள். ஏது இவ்வளவு தூரம்....வீடு தேடி வந்திருக்கிறீர்கள் ?

சிர்கே : இனி வந்துதானே ஆகவேண்டும்.

தானுஜி : அதற்கு நான் என்ன பட்டவர்த்தனனு, மகுடவர்த்தனனு ?

சிர்கே : இதுவரையிலும் சாதாரண பிரமுகராக இருந்திருக்கலாம். இனி சம்மந்தி ராவ் !

தானுஜி : சிர்கே ! பரிகசிக்கின்றீர்களா ? அந்தப் பாக்கியம் யாருக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ ?

சிர்கே : தானுஜி ! மராட்டியத்தின் வருங்கால ராணி தங்கள் குமாரிதான். இது என் சகோதரி சூரியாவின் ஆசை.

தானுஜி : மகாராணியின் விருப்பப்படியே நடக்கட்டும். மனப்பூர்வமாகக் காத்திருக்கிறேன்.

சிர்கே : அதோடு, கொஞ்சம் கவனமும் இருக்கவேண்டும், உமது மருமகனுக்கே இளவரசுப் பட்டம் நிலைப்பதில்...

தானுஜி : ஏன் ? சாம்பாஜி வம்பு பேசுகிருனு ?

சிர்கே : அந்தச் சதிகாரன் சும்மாயிருந்தாலும் சத்ரபதிக்கு அந்தச் சபலமிருக்கிறது. சமயம் பார்த்து அந்த ஆசையைத் தகர்க்க வேண்டும்

தானுஜி : இராஜாராமனுக்கு வேண்டிய ஆதரவுகளை நான் தேடித் தருகிறேன், சிர்கே !

## காட்சி 23.

இடம் : ஒரு சோலைப் புறம்.
பாத்திரர் : சிர்கே, எக்கோஜி.

(இருவரும் சந்திக்கின்றனர்.)

சிர்கே : பின்னாள் பிரதமரே ! வணக்கம்.

எக்கோஜி : என்னையா கேலி.

சிர்கே : கேலியும் கிண்டலும் பேச நாமென்ன விளையாட்டுப் பிள்ளைகளா ?

எக்கோஜி : பிறகு பின்னாள் பிரதமர் என்றால் என்ன அர்த்தம் ?

சிர்கே : எக்கோஜி! முன்னாளில் அந்தப்பதவி வகித்தவரை முன்னாள் பிரதமர் என்றழைக்க வில்லையா ? அது போல பின்னாளில் பிரதமராகப் போகிற உன்னை......

எக்கோஜி : அந்தச் சந்தர்ப்பம் சந்தையில் வாங்கும்பொருளல்ல, நினைத்தவர்க்கெல்லாம் கிடைக்க.

சிர்கே : காலமும் இடமும் அறிந்து காரியத்தில் இறங்கினால்தானே கைகூடுகிறது.

எக்கோஜி : (எதைக் கருதி இந்தப் புதிர் போடுகிறீர்?) உமது பேச்சில் ஏதோ மர்மமிருக்கிறது.

சிர்கே : என் பேச்சில் மட்டுமா? மராட்டியத்தின் எதிர்கால அரசியல்கூட மர்மமாகத்தான் இருக்கிறது.

எக்கோஜி : மன்னன் சிவாஜி அதற்கு இடம் வைக்கமாட்டார்.

சிர்கே: அவர் இதயத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிற சிறு ஆசைதானே எதிர்காலச்சிக்கலுக்குக் காரணமாகப் போகிறது தெரியுமா?

எக்கோஜி: எதைப்பற்றிச் சொல்லுகிறாய்?

சிர்கே: மூடு மந்திரம் எதற்கு? வெளிப்படையாகவே சொல்லி விடுகிறேன், கேள். அந்தத் தறுதலை சாம்பாஜி சத்திரபதியாக வேண்டுமாம்!

எக்கோஜி: மராட்டிய அஷ்டபிரதானம் ஒரு நாளும் அனுமதிக்காது. அவனுடைய துரோகத்தையும், துடுக்குத்தனத்தையும் யாரும் மறந்துவிட மாட்டார்கள். சிர்கே! அந்தப் பயம் வேண்டாம். இராஜாராமே எதிர்கால மன்னன்.

சிர்கே: ம்... எக்கோஜி! இது உங்கள் நினைவில் இருக்க வேண்டும்.

## காட்சி 24.

இடம்: தனி மாளிகை.
மாந்தர்: சிர்கே, வைத்தியசரபம்.

(சரபத்தைத் தங்கள் சதிக்கு உடந்தையாக்க லஞ்சம் கொடுத்தல்.)

சிர்கே: சரபமே! இந்தாரும்...

வைத்திய சரபம்: (ஆச்சரியத்துடன்) வைரம்! விலை மதிப்பற்றது!

சிர்கே: ஆம்! விண்ணிலே மின்ன வேண்டிய நட்சத்திரம் மண்ணிலே நழுவியிருக்கிறது!

சரபம்: ஆஹா! (கண்களில் ஒத்திக்கொண்டு) சத்திர பதிகளின் மணி முடியை அலங்கரிக்க வேண்டியது. (திருப்பிக் கொடுத்தல்.)

சிர்கே: உமது மடியிலேயே இருக்கட்டும்.

சரபம்: (வாய்பிளந்து) என்ன? எனக்கா?

சிர்கே: ஆம்! உனக்கேதான். மகாராணி தந்த பரிசு.

சரபம்: ஆஹா! மகத்தான பேறு. என் வாழ்க்கையி லேயே பெறுதற்கரிய ஒன்றைப் பெற்றுவிட்டேன். மகாராணிக்குச் செய்யவேண்டிய ஊழியம்...?

சிர்கே: ஒன்றும் பிரமாதமல்ல. அரசியார் செய்துள்ள ரகசியமொன்று அம்பலமாகாமல் இருக்கவேண்டும்.

சரபம்: அப்படியொன்றும் எனக்குத் தெரிந்த ரகசிய மில்லையே.

சிர்கே: (சிரித்துக்கொண்டு) நான் தெரிய வைக்கிறேன் சரபம். நீ ஒத்துழைத்தால் இதுபோன்ற வைரங்கள் இன்னும் பல கிடைக்கும். துரோகம் நினைத்தால் அரசியின் வைரத்திற்கு ஆளாகவேண்டும்.

சரபம்: பாவனிமீது ஆணை. மகாராணியின் கட்டளைக் குக் காத்திருக்கிறேன்.

சிர்கே: மகிழ்ச்சி! மகாராணி க்ஷத்திரபதிக்கு வசிய மருந்திட்டு விட்டார்கள். அந்த மர்மம் வெளிவரக் கூடாது.

சரபம்: புத்தி...

## காட்சி 25.

இடம் : அரண்மனை வழி.
மாந்தர் : பிரமுகர்கள்.

பிரமுகர் 1 : மன்னன் நல்லபடியாகத்தானே இருந்தார்? வெள்ளிக்கிழமை பவானி பூஜையில்கூட பரவசத்தோடு கலந்துகொண்டிருந்தார். அதற்குள்ளாக...

பிரமுகர் 2 : இப்படி வருமென்று யாரும் எதிர்பார்த்திருக்கவே மாட்டார்கள்.

பிரமுகர் 1 : காரணம் என்னவாக இருக்கும் ?

பிரமுகர் 2 : மருத்துவ கேசரி வைத்திய சரபத்திற்கே புரியவில்லையாம்.

பிரமுகர் 1 : பாவம் ! மகாராணி ரொம்பவும் கலங்கிக் கொண்டிருப்பார்கள்.

பிரமுகர் 2 : மகாராணி மட்டுமா? மராட்டியம் முழுவதுமே அதிர்ச்சியுற்றிருக்கிறது.

பிரமுகர் 1 : அம்பாள் பவானிதான் துணை.

(பேசிக்கொண்டே செல்லுகின்றனர்.)

பிரமுகர் 3 : மிகவும் கடுமையான நோய் போலிருக்கிறது.

பிரமுகர் 4 : அப்படித்தான் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

பிரமுகர் 3 : வீராதி வீரன் ! எதிரிகளின் வாளுக்கும், வேலுக்கும் வீழ்ச்சியுறாதவர்!

பிரமுகர் 4 : என்ன செய்வது? இந்த நோய் வீழ்த்தி விட்டது.

(செல்லுகின்றனர்.)

## காட்சி 26.

இடம் : சிவாஜி மாளிகை.

மாந்தர் : வைத்தியசரபம், பேஷ்வா, மௌரி பிங்களன், சிர்கே, ஹம்சாஜி.

(வைத்தியசாபத்திடம் சிவாஜி நிலைமை பற்றிக் கேட்கின்றனர்.)

பேஷ்வா : சரபம் ! தாது எப்படியிருக்கிறது ?

வைத்திய சரபம் : நாடி பேசவில்லை.

மௌரி பிங்களன் : நல்ல மருந்தாகக் கொடுத்தீர்களா?

சரபம் : மருந்து இனிவேலை செய்யாது பிரதமரே!

ஹம்சாஜி : பேச்சு கணீரென்று இருக்கிறதே.

பேஷ்வா : முகம் கொஞ்சம்கூட வாடவில்லை.

சரபம் : தேஜஸ் அதிகமாகவே இருக்கும். அணையும் ஜோதியல்லவா ?

பேஷ்வா : நாங்கள் எதிர்பார்க்கவே யில்லை. திடீரென்று படுத்துவிட்டார்.

ஹம்சாஜி : காரணம் என்னவாக இருக்கும்?

சரபம் : விஷம் வேலை செய்திருக்கிறது.

பேஷ்வா : விஷமா !... (அனைவரும் பரபரப்பு அடைகின்றனர். சிர்கேக்கு உதறல் எடுக்கிறது.)

சரபம் : ஆம்; களத்திலே பாய்ந்த விஷக் கத்தி செய்த வினை!

ஹம்சாஜி : ரணங்களெல்லாம் ஆறிப் பலநாளாகி விட்டன.

சரபம் : மேலே சாய்ந்துவிட்டன: ஆனல், உள்ளூர ரத்தத்திலே சோறி விட்டது.

ஹம்சாஜி : அதனல் நேற்று வரை எந்தக் கோளாறும் ஏற்படவில்லையே.

சரபம் : இன்னும் ஒரு வாரம் கடந்திருந்தால், ஒரு ஆபத்தும் நேர்ந்துவிடாது. அதற்குள்...

மௌரி : தெளிவாகச் சொல்லும். ஏன் விழுங்குகின்றீர்?

சரபம் : ரத்தம் முறிந்து, விஷ ஜுரத்தில் கொண்டு விட்டது.

ஹம்சாஜி : விஷம்! ......ஜுரம்! ......ஜுரம்! ......விஷம்! என்று சுற்றி வளைத்துச் சொன்னதையே சொல்லுகிருர். (கோபமாக)

பேஷ்வா : ஏன் கூசுகின்றீர் ?

சரபம்: போராடி வந்த களைப்புத் திருமுன் போகக்களிப்பு மிஞ்சி விட்டது. போதாததற்குத் தைல முழுக்கு வேறு. கேட்கவா வேண்டும்? கீழே சாய்த்து விட்டது.

சிர்கே : இனி ஒன்றுமே செய்ய முடியாதா ?

சரபம் : மாற்றே இல்லை.

பேஷ்வா : ஆ...(அதிர்ச்சி) அப்படி என்ருல்...?

சரபம் : மன்னனைக் கைகழுவ வேண்டியதுதான். ஓடிக் கொண்டிருக்கிற மூச்சும் சிறிது நேரத்தில் ஓய்ந்து விடும்.

(அனைவரும் பதறிய வண்ணம் மன்னரின் மாணப் படுக்கையை நோக்கி ஓடுகின்றனர். அதே சமயத்தில் உள்ளே இருந்து தேம்பிய வண்ணம் சிலரும், கண்ணீரைத் துடைத்த வண்ணம் சிலரும் வெளியேறுகின்றனர். துக்கக் கொடி உயர்த்தப் படுகிறது.)

## காட்சி 27.

இடம் : பனகலக் கோட்டை மாளிகை.

மாந்தர் : சாம்பாஜி, சந்திரா.

(சாம்பாஜியும், சந்திராவும் மலர்ப் படுக்கையில் குலவிக் கொண்டிருக்கின்றனர்.)

சந்திரா : சுவாமி !...

சாம்பாஜி : சந்திரா !...இந்த வையத்தின் வனப்பையெல்லாம் உன் மேனியின் பளபளப்பில் காணுகின்றேன். தாமரை முகத்தினிலே சகல கலைகளும் தவழுகின்றன. கனிவு வழியும் அந்தப் பார்வை மன்மதக் கலையைச் சொல்லித் தருகிறதடி!

சந் : ஆசைப் பெருக்கில் ஏதேதோ அர்ச்சிக்கின்றீர்கள்.

சாம் : வான வில்லுக்கு அதன் சோபிதம் தெரிவதில்லை தான்!

சந் : வான வில்லின் வர்ண ஜாலம் கால்வாங்கிய மேகத்தோடு கலந்துவிடும்.

சாம் : கலையும் வான வில்லோடு ஒப்பிட்டது தவறு தான். நிலையான அழகிற்கு இலக்கியம் நீ! சிற்பி உன்னைக் கண்டிருந்தால் சிலையாக வடித்திருப்பான். ஓவியன் பார்த்திருந்தால் வண்ணப் படங்கள் பல வரைந்திடுவான். கவிஞன் கண்டிருந்தால் காவியங்கள் பாடி இருப்பான். . வாளேந்தும் நான்—

சந் : இன்பத்தின் எல்லைக்கு அழைத்துச் சென்றிருக்கிறீர்கள் தேவா!

சாம் : சந்திரா ! ஏழிசையாய், இசைப் பயனாய், நீ தரும் இன்பத்திற்கு முன்னால், இந்த மராட்டிய சாம்ராஜ்யமும். மணிமுடியும் எனக்குச் சிறு துரும்பு!

## காட்சி 28.

இடம் : ராஜகிரி அரண்மனை.

மாந்தர் : பிரமுகர்கள், பிரதானிகள், இராஜா ராம், சூரியா, சிர்கே.

முடிசூட்டு விழா : 'வாழ்க அந்தணர்! வானவர் ஆனினம்'...என்ற பாடல் முழங்குகிறது.

குரல்கள் : சத்திரபதி ராஜாராம் வாழ்க!

சத்திரபதி இராஜாராம் வெல்க!

(பூமாரி பொழிதல்.)

சிர்கே : (தலைவணங்கி) பெருமக்களே! மராட்டிய சரித்திரத்திலே மறு அத்தியாயம் ஆரம்பமாகிவிட்டது. இன்று முடிசூட்டு விழா. குதூகலப்படவேண்டிய நாள். மகிழ்ச்சி பெருக்கெடுக்க வேண்டிய நேரம். ஆனால்...நாம் விழாக் கொண்டாடவில்லை. மகத்தான பொறுப்பை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். மன்னனை இழந்த மனவேதனை இன்னும் ஆறிவிடவில்லை. எதிர்பாராத நிலையில் பல நெருக்கடிகளுக்கு ஆளாக்கி விட்டு அவர் மறைந்து விட்டார். அந்தத் துக்கத்தை நாடறியாமல் மறைத்துவைக்க நேரிட்டுவிட்டது. ஏனப்படிச் செய்தோம் என்றால், களத்திலே பின்வாங்கிய மொகலாயர்கள் திரும்பி வந்து தாக்கக்கூடும் என்ற பயங் காரணமாகத்தான்! வெளியார் ஆக்கிரமிப்பிலிருந்தும் தப்ப இந்த மூடு மந்திரம் தேவைப்பட்டது. நமது அவல நிலை உள் குழப்பத்திற்கும் இடமுள்ளதாகவே இருந்தது. அது காரணமாக சாம்பாஜியை யல்லாமலே கிரியைகளை முடித்து விட்டோம். அதற்குரிய மூத்தபிள்ளை அவன் தான். என்ன செய்வது? அவன் போக்கு நீங்கள் அறியாததல்ல. அழைத்திருந்தால் அண்ணல் இறந்

தைப் பொருட்படுத்தி யிருக்கமாட்டான். அரசுக் காக ஆர்ப்பாட்டம் செய்திருப்பான். ஆதரவு இல்லை யென்றால் அந்நியர்க்கு உடந்தையாகித் துரோகம் புரிந்திருப்பான். அதையும் கருதத்தான் வேண்டி யிருந்தது. ஒருவாறு அத்துன்பங்களைக் கடந்து விட்டோம்.

மராட்டியப் பெருமக்களின் விருப்பப்படியும், அஷ் டப்பிரதானத்தின் ஆலோசனைப்படியும், இராஜா ராம் சத்திரபதியாக முடிசூடியுள்ளான். அன்னார், அண்ணல் சிவாஜியைப் பின்பற்றி மராட்டியத்தை ரட்சித்தருள்வாரென்று நம்புகிறேன். அரசர்க்குத் தக்க வயதும், அநுபவமும் ஏற்படும்வரை மகாராணி யார் அரசியலில் கவனம் செலுத்தி வருவார்கள் என்ற நற்செய்தியையும் அறிவித்துக் கொள்ளு கிறேன். வணக்கம். வாழ்க (ராஜாராம்) சத் திரபதி!

**மகாராணி:** (கண்ணீரைத் துடைத்துக்கொண்டு) அன்னை பவானியே! நீதான் துணை! அநுபவமும், ஆட்சித் திறமையுமிக்க அஷ்டப்பிரதானமிருக்கிறது. பிரதமர் இருக்கிறார், தளபதிகள் இருக்கின்றனர், பெருமக் கள் இருக்கின்றனர் என்ற தைரியத்தில்தான் நானிருக்கிறேன். மன்னனிடம் கொண்டிருந்த பிரேமை குறையாமல் அவர் மகனிடமும், விசுவாசம் வைப்பீர்களென்ற நம்பிக்கையுண்டு. மராட்டியத் தின் கீர்த்தி உங்கள் கையிலே இருக்கிறது. உங் கள் ஒத்துழைப்போடு, நாட்டிற்கு ஊழியம் புரியக் காத்திருக்கிறேன். வாழ்க மராட்டியம்! வளர்க அதன் புகழ்!

(புரோகிதர் குடவிளக்கேற்றி ஆரத்தி எடுக்கிறார்.)

## காட்சி 29.

இடம்: பனகலம் ஜனார்த்தனர் காரியாலயம்.
மாந்தர்: ஜனார்த்தனர், கவி, சாம்பாஜி.

(ஜனார்த்தனனிடம் சாம்பாஜி சீறுகிறான்.)

கவிகுலேஷ்: அவமானம்! அவமானம்!! இளவரசனுக்கு அவமானம்!

ஜனார்த்தனர்: குலேஷ்! ஏன் இந்தப் பதட்டம்? என்ன நடந்தது?

கவி: பாவம்! ஒன்றுமே தெரியாத உத்தமர்!

ஜனா: தம்பீ! உன் சொல் வன்மை கவி பாடுவதிலே இருக்கட்டும். வந்த விபரத்தைச் சொல்.

கவி: பாராளும் வேந்தன் மகன் .....ஒரு பண்டிதனுக்குச் சன்மானம் வழங்கினார். அதை நீர் பறிமுதல் செய்தது ஏன்?

சாம்: (குறுக்கிட்டு) நம்மைக் கேவலப் படுத்த!

ஜனா: அல்ல; கஜானா காலியாகாமல் பாதுகாக்க!

சாம்: ஆலோசனை கூறவந்த இவருக்கு நம் அதிகாரத்தில் தலையிட உரிமையேதென்று கேள்...?

ஜனா: சாம்பாஜி! எல்லாம் உன் நன்மைக்குத்தான்!

சாம்: அறிஞரே! அன்றொருநாள் நீதிமன்றத்தில் ஆயுள் தண்டனை விதித்தீரே, அதுவும் என் நன்மைக்குத் தான்! ஆலோசகராக அமர்ந்துகொண்டு என் நடவடிக்கைகளில் வேவுகாரன் வேலை பார்த்து வருகிறீரே, அதுவும் என் நன்மைக்குத்தான்! ரகசியமாக

என் கடிதப் போக்குவரத்துகளைத் தணிக்கை செய்கிறீரே, அதுவும் என் நன்மைக்குத்தான்! (ஏளனச் சிரிப்பு) இவைகளை எல்லாம் பொறுத்து வந்தேன், என் தந்தையின் நண்பரென்பதற்காக. ஆனால்... என்னை மிகவும் எளிதாக மதித்து, நான் வழங்கிய சன்மானத்தைத் தட்டிப் பறிக்க என்ன துணிவு?

ஜனு : சாம்பாஜி! உன் அரசியல் ஞானம் இவ்வளவு தானா?

கவி : கிழவரே! கேள்விக்குப் பதில். நாடாள வந்தது யார்?

ஜனு : நாடாள வந்திருக்கலாம், தம்பீ! நாடாள வந்த சிம்மத்தை நானாள வந்திருக்கிறேன் என்பது புரியவில்லையே.

சாம் : ஆஹா! (ஆங்காரமாக) யாரை யார் ஆள்வது? (வாளில் கையை வைக்கிறான்.)

ஜனு : பதறாதே! பார் இந்தப் பவானி முத்திரையை!

(கவியும், சாம்பாஜியும் கண்டு திகைத்து நடுங்குகின்றனர்.)

சாம்பாஜி! உன்னைச் சிம்மாசனத்திற்குத் தகுதியுள்ள பிள்ளையாக்கத்தான் என்னை அனுப்பிவைத்தார் சிவாஜி. நான் என்ன செய்வேன்? அரசியலிலே உனக்கு அக்கறையில்லை. கேளிக்கைகளிலே ஈடுபட்டு விட்டாய்! நீதிநூல் பயிலவேண்டிய நீ, இன்பக் கலை நூல் இயற்றி இருக்கிறாய்! மக்களின் நம்பிக்கைக் குரியவனாக வேண்டிய நீ, அச்சத்திற் குரியவனாய் நடந்து கொள்கிறாய்...........!போகட்டும்! அந்தப்

பாகவதருக்கு நீ அணிந்துள்ள மணிமாலைகளை வழங்கியிருந்தால் கேட்டிருக்கமாட்டேன். நீ வாழும் மாளிகையில் குடியேற்றி இருந்தால்கூட மறுத்திருக்கமாட்டேன். உனக்கென ஒதுக்கப்பட்ட அளவுக்குள் அள்ளி அள்ளிக் கொடுத்திருந்தாலும் தடுத்திருக்க மாட்டேன். பொது நலத்துக்கென ஒதுக்கப்பட்ட நிதியை உன் சொந்த விருப்பத்திற்குத் தொட உரிமையேது? நினைத்துப் பார். இனியாவது பக்குவமாக நடந்து கொள்.

(தலைகுனிந்து திரும்புகின்றனர்)

## காட்சி 30.

இடம் : ஒரு தனிக்கூடம்.
மாந்தர் : மௌரி பிங்களன், அம்சாஜி.

(இருவரும் மகாராணியின் ஆதிக்கத்தை வெறுக்கின்றனர்.)

மௌரி பிங்களன் : அம்சா! சூதுக்கும், சூழ்ச்சிக்கும் உறைவிடமாகிவிட்டது மராட்டியம். வீரத்திற்கும், விவேகத்திற்கும் இங்கே இனி இடமில்லை.

அம்சாஜி : ஆம்; சிர்கேயின் நரித்தனத்திற்குத்தான் செல்வாக்கு. அவனுக்கு உடந்தையானவர்களுக்குத்தான் தர்பாரிலே மரியாதை கிடைக்கும்.

மௌரி : மகாராணியும் பெரிய ராஜதந்திரிதான். நாம் இராஜாராம் முடிசூடுவதைத்தானே ஒத்துக்கொண்டோம். அவர்கள் எவ்வளவு சாமர்த்தியமாக மேலதிகாரம் வகிக்கிறார்கள், பார்த்தாயா?

அம் : அந்தப் பெண் புலியின்கீழ் வேலைபார்க்க எனக்கு விருப்பமேயில்லை. நம்மையெல்லாம் பெயரளவில் வைத்துக்கொண்டு ரகசியமாகக் காரியங்கள் நடத்தப்படுகின்றன.

மௌரி : நடக்கட்டும். சமயம் பார்த்துச் சரியான பாடம் கற்பிப்போம்.

அம் : இன்றுகூட பனகலத்திற்கு ஏதோ இரகசியக் கட்டளை கொண்டு சென்றிருக்கிறான் கண்டோஜி நாயக்.

மௌரி : ஓஹோ ........!

## காட்சி 31.

இடம் : பனகலக் கோட்டைப் புறம்.
மாந்தர் : கவி, சாம்பாஜி, கண்டோஜி.

(கவியையும், சாம்பாஜியையும் கண்ட கண்டோஜி நாயக் பதுங்கி மறைகிறான். சாம்பாஜி பிடித்து விடுகிறான்.)

சாம்பாஜி : கண்டோஜி! நீ எங்களைக் கண்டதும் பதுங்கிப் பதுங்கிச் செல்லவேண்டிய அவசியமென்ன ?

கவிகுலேஷ் : அந்தக் கிழவனிடம் வந்திருப்பான். அது நமக்குத் தெரியக்கூடாதல்லவா ?

சாம் : நீ வந்த காரியத்தை நாங்கள் அறியலாமா ?

கண்டோஜி : வழக்கம் போலத்தான் தபால் கொண்டு வந்தேன்.

சாம் : அப்படியா ? அந்த ரகசிய அஞ்சற்காரன் நீதானா?

கவி : நீ கொண்டு வந்த அஞ்சலைப் பற்றித்தான் இள வரசர் தெரிந்துகொள்ள விரும்புகிறார்.

கண் : எனக்கு எப்படித் தெரியும்? முத்திரையிட்ட உறையில் அனுப்பினார்கள்.

சாம் : இந்தக் கிழவர் மன்னருக்குப் பதில் கொடுத்திருப் பாரே ?

(மன்னர் என்றதும் கண்டோஜி அதிர்ச்சி யடைகிறான்.)

சாம் : கண்டோஜி ! ஏன் இந்த அதிர்ச்சி ?

கவி : எங்கே, தாங்கள் அந்தப் பதிலைக் கேட்டு விடுவீர் களோ என்ற பயம்தான்.

சாம் : மன்னருக்குச் செல்வதை வழி மறிப்பேனா ? கண் டோஜி! இது போகட்டும். என் தந்தையார் நலம் தானே?

கவி : தாங்கள் அரசருக்கு அனுப்ப விரும்பிய அஞ்சலை யும் இவன் வசமே கொடுத்து விடுங்களேன்.

(இதைக் கேட்டதும் கண்டோஜி மிகவும் நடுங்குகிறான்.)

கண் : இளவரசே !...... (நடுக்கம்)

சாம் : குலேஷ் ! ஏன் இப்படி நடுங்குகிறான் ? அவன் முகத்தைப் பார்.

கவி : வஞ்சகத்தின் சாயல் கொஞ்சி விளையாடுகிறது.

(பேசிக்கொண்டிருக்கும் போதே கண் டோஜி ஓடமுயற்சிக்கிறான். சாம்பாஜி மடக்கிப் பிடிக்கிறான்.)

**கவி :** இளவரசே! இவன் போக்கில் ஏதோ மர்ம மிருக்கிறது.

**சாம் :** கண்டோஜி! யாரிடம் விளையாடுகிறுய்? (குதிரைச் சவுக்காலடிக்கிறுன்.) சொல் உண்மையை. எங்கே வந்தாய்? என்ன கட்டளை கொண்டு வந்தாய்? அந்தக் கிழவன் என்ன பதில் கொடுத்தார்?

(அடி விழவிழ அலறுகிறுன்.)

**கண் :** இளவரசே! என்னை மன்னியுங்கள். மன்னர் மாண்டு பல நாளாகி விட்டது. மகாராணியின் கட்டளையைத்தான் கொண்டு வந்தேன்.

**சாம் :** ஆ.........!

## காட்சி 32.

இடம் : ஜனார்த்தனர் காரியாலயம்.
மாந்தர் : ஜனார்த்தனர், ஒரு தளபதி, சாம்பாஜி, கவி, வீரர்கள்,

(ஜனார்த்தனர் ஆத்திரமும், ஐயமும் கொண்டவராய்க் குறுக்கும், நெடுக்குமாக நடக்கிறார். தளபதி பணிவுடன் நிற்கிறார்.)

**ஜனார்த்தனர் :** தளபதி! இந்த ஆணையை நிறைவேற்று.

(ஓலையைத் தருகிறார்.)

**தளபதி :** (படித்தல்) 'மகாராஷ்டிர மண்டிலாதிபதி மன்னர்பிரான் சத்திரபதி இராஜாராமுக்காக மகாராணி சூரியாபாய் பிறப்பிக்கும் கட்டளை என்னவென்றால், அறுபது நாழி

கைக் குள்ளாக சாம்பாஜியைக் கைது செய்து தக்க பாதுகாப்புடன் தர்பாருக்குக் கொண்டு வருக.'

பிரபோ! இது என்ன மாயம்? சத்திரபதி ஸ்தானத்திலே இராஜாராமென்றால் வேந்தன் சிவாஜி என்ன ஆனார்?

ஜனு: அந்த மர்மம்தான் எனக்கும் புரியவில்லை. மராட்டிய மணிவிளக்கு அணைந்து விட்டது அல்லது மகுடத்திற்காகச் சதி நடந்துவிட்டதோ? இந்தக் கட்டளை வந்திருக்கிறது.

தள: இந்த நிலையில் இதனை நாம்...........

ஜனு: ...நிராகரிப்பதற்கில்லை.

தள: சதியாக இருந்தால்...?

ஜனு: அதற்குப் பொறுப்பாளி நாமல்ல. அங்கே பேஷ்மா, பிரதமர், தளபதிகள், அஷ்டப்பிரதானம் அனைவரும் இருந்திருக்கின்றனர். அவர்களுடைய நடவடிக்கை மராட்டியத்தின் நன்மையை நாடியதாகத்தானிருக்கும்.

தள: இது சாம்பாஜிக்குத் துரோகமல்லவா?

ஜனு: என்ன செய்வது? அரச ஆணைக்கு முன்னால், நம் சொந்த விருப்பத்திற்கு இடமேது?

தள: பிரபோ! சிவாஜியின் மைந்தனைச் சிறை செய்ய என் மனம் துணியவில்லை.

ஜனு: தளபதி! உன் தயக்கம் நியாயமானது. ஆனால், அதில் நீதியில்லை. நீ எடுத்துக் கொண்டுள்ள விசு

வாச பிரமாணத்தை எண்ணிப்பார். வந்திருப்பதோ பவானி முத்திரையிட்ட கட்டளை. அதனை மறுதளிப்பது ராஜத்துரோக மல்லவா ?

தள : மன்னியுங்கள். எனக்குத் தைரியமில்லை. இந்தப் பதவியிலிருந்தே விலகிக் கொள்ளுகிறேன்.

ஜனு : (நகைத்து) கடமையை நிறைவேற்றத் தயங்கும் நீ தளபதி ஸ்தானத்திற்குத் தகுதியற்றவன்தான்! போ. இதோ சென்று நானே அவனைக் கைது செய்கிறேன்.

(ஆத்திரத்துடன் புறப்படுகிறார். சாம்பாஜியும், கவியும் மர்மப் புன்னகையுடன் வருகின்றனர். ஜனார்த்தனர் திகைக்கிறார்.)

கவி : யாரைக் கைதுசெய்யவேண்டும்? சொல்லுங்கள். இதோ இளவரசர் இருக்கிறார். அவர் கையிலே வாள் இருக்கிறது. அவர் சுட்டு விரல் அசைந்தால் புயல் எனக் கிளம்பும் போர் மறவர் இருக்கின்றனர்.

(இது சமயம் வீரர்கள் வந்து சூழ்கின்றனர்.)

தள்ளாத வயதிலே தங்கட்கு ஏன் சிரமம் ? சொல்லுங்கள் பெரியவரே! (ஏளமாக நகைத்தல்.)

சாம் : (பல்லைக் கடித்து) எவ்வளவு நெஞ்சுரம் ? சிவாஜி பெற்ற இந்தச் சிம்மத்தைக் கைதுசெய்யப் புறப்பட்டு விட்டார். சிறு நரியே! என்னைப் பார். டில்லி பாதுஷாவுக்கு இல்லாத தைரியம் உனக்கு எங்கிருந்து வந்தது? அவன்கூட விருந்தாளி என்று வைத்திருந்தானே யல்லாமல் கைதி யென்று சொல்லப் பயந்தான். நீர் துணிந்து விட்டீர்.....என் தந்தையின் தோழன் என்பதற்காக இந்த வாள் இன்னமும் உறை

யிலே கிடக்கிறது. (நகைத்து) அந்தச் சூதுக்காரி அனுப்பிய கட்டளை எங்கே ?

தூள : இதோ இருக்கிறது மகாராஜ்.

(கவி அதனை வாங்குகிறார்.)

சாம் : அவள் சூழ்ச்சிக்கு நீரும் உடந்தையா ?

ஜனு : இல்லை; சிவாஜியின் தோழனிடத்தில் அப்படிப் பட்ட சிறுமை இருக்காது.

சாம் : இல்லையென்றால் என்னைக் கைது செய்யப் புறப் பட்டது ஏன் ?

ஜனு : கடமை.

சாம் : பங்காளிப் பகையில் ஒரு பக்கத்தில் சார்ந்து நிற் பது கடமையா ?

ஜனு : அல்ல; சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பது ஒரு சிற்றெறும்பாக இருந்தாலும், அதன் கட்டளையை நிறைவேற்றுவதே ஊழியர் பொறுப்பு!

சாம் : ஓஹோ.........! அந்தக் கடமையை உணர்ந்த நீர் மன்னன் இறந்ததை மறைத்து வைத்திருந்தது எந்தப் பொறுப்பில்?

ஜனு : அது எனக்குத் தெரியாத புதிர்.

சாம் : அரசர் எப்பொழுது இறந்தார் ?

ஜனு : தெரியாது.

சாம் : எப்படி இறந்தார் ?

ஜனு : முன் பதில்தான் இதற்கும்.

கவி : ஏன் இறந்தார் ?

ஜனு : அவரைத்தான் கேட்கவேண்டும்.

சாம் : துரோகி! சாணக்கியனின் அரசியலைக் கரைத்துக் குடித்த மேதை யல்லவா?

கவி : அதற்குத் தக்கபடி நடத்துங்கள்.

சாம் : (வீரர்களைப் பார்த்து)ம்......நடக்கட்டும் முதல் மரியாதை! (இந்தக் கிழவனுக்கு.)

(வீரர்கள் கைது செய்கின்றனர்.)

## காட்சி 33.

இடம் : தனிக்கூடம்.
மாந்தர் : மௌரிப் பிங்களன், அம்சாஜி.

—சதி நடத்தல்—

மௌரி பிங்களன் : அம்சா! நாம் வஞ்சம் தீர்த்துக் கொள்ளச் சரியான சந்தர்ப்பம். (நகைப்பு)

அம்சாஜி : ஆம்; நாம் எதிர்பாராமலே நேர்ந்து விட்டது.

மௌரி : ஒரு வேளை விளைவு வேருக வேறாக இருந்துவிட்டால்...?

அம் : தங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம். வெற்றி நமதே!

மௌரி : அவர்களுந்தான் கவலையற்று இருக்கிறார்கள். இன்றைய தர்பார் கோலாகலத்துடன் கூடப் போகிறது.

அம் : பாவம்! வரப்போகிற ஆபத்தை அவர்கள் அறிய மாட்டார்கள்........ஒற்றர்கள் கொண்டு வந்த தகவல்களெல்லாம் அவர்கள் காதுக்கு எட்டாமலே தடுத்து விட்டேன்.

மௌரி: சபாஷ்! மேற்கொண்டு நாம் செய்யவேண்டுவது...?

அம்: எதுவுமே பாக்கியில்லை. சாம்பாஜி படையுடன் நெருங்கியதும் ஏசாஜிகங்க் கோட்டைக் கதவைத் திறந்துவிட்டு விடுவான். மராட்டியப் பெரும்படை மௌனம் சாதிக்கப் போகிறது. (புன்னகை)

மௌரி: சரியான பாடம்! சிர்கேயின் செருக்குத் தீர்ந்தது இன்றோடு!

## காட்சி 34.

இடம்: இராஜாராம் தர்பார்.

மாந்தர்: இராஜாராம், சூரியாபாய், சிர்சே, மற்றும் பிரதானியர், சாம்பாஜி, கவி, வீரர்கள் முதலியோர்.

(இராஜாராம் கொலுவிருத்தல், நடனம் நடைபெறுகிறது. அது சமயம் எதிர்பாராத நிலையில் சாம்பாஜியும், அவனது சகாக்களும் திடீரென்று புகுந்து தாக்குகின்றனர்.)

சாம்: (சிற்றத்துடன் நகைத்து) வஞ்சகக் கூட்டமே! என் வாளுக்குப் பதில் சொல்.

(இரண்டொருவரைத் தாக்கி வீழ்த்தல்.)

துரோகக் கும்பலே! உங்களைச் சுட்டுப் பொசுக்குகிறேன்.

(மேலும் சிலர் தாக்கப்படுதல்.)

சிங்கத்தின் குகையிலே செந்நாய்க்கு ஆதிக்கமா?

(எதிரிகள் நடுங்கச் சாடுதல்.)

சதிகாரர்களே! எங்கே உங்கள் தர்பார்?

(இராஜாராம் பயத்தால் வெடவெடத்தல்.)

மராட்டிய மணி முடியைத் தாங்க ஒரு பொடிப் பயலா?

(இராஜாராமை நோக்கி வாளை ஓங்குதல். இராஜாராம் அச்சத்தால் "அண்ணா" வென்று அலறி முடியைச் சாம்பாஜியின் அடியில் வைத்துப் பணிதல்.)

(குலேசிடம்) குலேஷ்! இந்தச் சிறுவனைச் சிறையிலே கொண்டு தள்ளு!

(வீரர்கள் பற்றுதல்.)

(எதிரிகளைப் பார்த்து) பேடிகளே! வளையல் அணிந்தவள் ஆதிக்கத்தை ஒப்பிய உங்களுக்கு வாள் ஏன்? வரிசை ஏன்? முகத்திலே மீசை ஏன்? ஒரு பெண்ணின் பிடியிலே சாம்ராஜ்யத்தைச் சிக்க விட்டு அவளுக்குக் கட்டியம் கூறி நிற்கும் நீங்களும் ஆண்கள்தானா? வெட்கம்! வெட்கம்!! அரசுக்குரியவன் யார்? என் உரிமையைக் கவர என்ன துணிவு? அயோக்கியப் பதர்களே! உங்களுக்கு அறிவில்லையா?

துரோகம் புரிந்த உங்களுக்கு மராட்டியத்தில் மட்டுமல்ல, இந்த மண்ணுலகிலேயே இனி இடமில்லை!

(தனது வீரர்களைப் பார்த்து) இவர்களைக் கொண்டுபோ பலிபீடத்திற்கு!

(வீரர்கள் எதிரிகளைப் பிடித்துச் செல்லல்.)

(சாம்பாஜி சூரியாபாயிடம் பாய்தல்) ஏ சண்டாளி! மன்னன் எங்கே? மகாராஷ்டிர ஜீவன் எங்கே? சுதந்தர சிற்பி எங்கே? சாத்பூரா தந்த செல்வ மெங்கே? என் தந்தை எங்கே? சொல்......! சொல்...... !

(சூரியாபாய் தலை கவிழ்ந்து நிற்கிறாள்.)

அடி படுநீலி! அந்த மாவீரனைக் கொல்ல உனக்கு எப்படி மனம் வந்தது? கொண்ட கணவனுக்கு விஷம் வைக்க எவ்வாறு துணிந்தாய்?

பெண் பேயே! பெற்ற தந்தையின் பிண முகத்தில் கூட என்னை விழிக்காமற் செய்து விட்டாயே. அந்தத் துக்கத்தில்கூட எனக்குப் பங்கில்லையா? ஏன் மௌனம்? மராட்டியத்திற்கு உன்னால் மகத்தான நஷ்டம் ஏற்பட்டு விட்டது. அதனை மக்கள் அறியாமல் மறைத்தது ஏன்? நாடறியாமல் மகனுக்கு முடிசூட்டு விழா நடத்தியது ஏன்? கடைசியாக என்னைக் கைது செய்யக் கட்டளை அனுப்பியது ஏன்? சொல் உண்மையை. உன் சூழ்ச்சி அவ்வளவு தானா? ஏன் சிலைபோல் நிற்கிறாய்? மௌனத்தால் நீ செய்த மாபாதகங்களை மறைத்துவிட முடியாதுடி, கள்ளி! வஞ்சனையின் உருவமே! கொடுமையின் இருப்பிடமே!

(தன்னாட்களைப் பார்த்து) இந்தப் பேயை உயிரோடு வைத்துக் கல்லறை கட்டுங்கள்.

## காட்சி 35.

இடம் : படுகளப் பாதை.

மாந்தர் : பழைய கிழவன், சிர்கே.

(சிர்கே வெட்டுக் காயங்களுடன் தள்ளாடிய வண்ணம் காலிழந்து தவிக்கும் கிழவனைத் தூக்குகிறான்.)

கிழவன் : சிர்கே! வேண்டாம். வேண்டாம். என்னை ரட்சிப்பதற்கா இந்த ரத்தச் சேற்றிலே உன்னைத் தேடி எடுத்தேன். என்னைக் காப்பாற்றுகிற முயற்சியில் நீ அகப்பட்டுக் கொள்ளாதே. என் காலம் தீர்ந்து விட்டது. நீ தலை தப்பினால் போதுமடா தம்பீ! எப்படியாவது நீ பிழைத்துப் போ. (தேம்பிய வண்ணம் கண்ணீருடன்.)

நேற்றைய தர்பாரைக் கவனப்படுத்திக் கொள். கல்லறையில் உயிரோடு வைத்துக் கட்டப்பட்ட மகாராணி உன் நினைவிலே நிற்கட்டும். இந்தப் பிணக் காட்டைப் பார். உன் தோழர்களிலே பல பேருக்குத் தலை போய்விட்டது. என்னைப்போல் கால் போனவர்கள் அநேகம் பேர். கண்ணிழந்தவர்களுக்குக் கணக்கே இல்லை. சந்தேகப்பட்டர்கள் எல்லாம் சித்திரவதை செய்யப்பட்டு விட்டார்களடா! (சோகத்துடன்)

இந்தப் பயங்கரப் படுகொலை சொல்லும் பாடத்தைக் கற்றுக்கொள். இதற்கெல்லாம் ஒருநாள் சாம்பாஜிக்கு நன்றி செலுத்த மறந்து விடாதே! (ஆத்திரமாக)

(சிர்கே வேதனையால் விம்மி நிற்கிறான். கிழவர் சாய்கிறார்.)

## காட்சி 36.

இடம் : அரண்மனை.

மாந்தர் : கவிகுலேஷ், சாம்பாஜி, மௌரி பிங்களன்.

(வெற்றிக்குப்பின் கூடிப் பேசுகின்றனர்.)

கவிகுலேஷ் : நான் எதிர்பார்க்கவே இல்லை இவ்வளவு எளிதில் வெற்றி கிட்டுமென்று !

சாம்பாஜி : எதிரிகளும்தான் கருதி இருக்க மாட்டார்கள் மூன்றே வாரத்தில் தங்களுக்கு இந்த முடிபு ஏற்படு மென்று !

மௌரி பிங்களன் : மன்னு ! இது மகத்தான சாதனை!

சாம்பாஜி : இருந்தும் என்ன பயன் ? ஒரு பரதேசி மறுத்து விட்டானே நமது வெற்றியை...! (கோபத் துடன்.) முடிசூட்டு விழாவிற்கு அழைத்தோம். பொருட் படுத்தவில்லை. நான் ஒரு பாவியாம்......... கொலை மனம் படைத்தவனும்...... ரத்தவெறி பிடித் தவனும்...... என்னைக் காண அவர் கண்கள் கூசுகிற தாம்...... (நகைத்து) அந்தக் கண்களைப் பறித்து விட்டால்...... ?

மௌரி: அபசாரம்...... ! அபசாரம்...... ஆத்திரப்படா தீர்கள். அவர் மக்களின் பக்திக்குரிய மகான். அவ ருடைய ஆசி மொழி அன்றே வந்துவிட்டது. அவை யிற் படிக்க நேரமில்லை.

கவி : எங்கே ? கொண்டுவா பார்க்கலாம்.

(மௌரி பிங்களன் கொண்டு வந்து தருகிறான். கவி வாங்கிப் படிக்கிறார்.)

## —ஆசி மொழி—

" மன்னா! உனக்கு யாவும் மங்களமே யாகுக! உன் கீர்த்தி பரவட்டும்!

மக்களை மகிழ்ச்சியோடு இருக்கச் செய். அவர்களுடன் மனங்கலந்து பழகு. அவர்களைக் கட்டுப் படுத்தியும் வை. அச்சத்தினால் அல்ல; அன்பினால்! நீ எப்பொழுதும் தற்காப்போடு இரு. எதிரிகளிடத்திலும் பயத்தை உண்டு பண்ணு. கொடூரத்தினால் அல்ல! ஒப்பற்ற வீரத்தினால் கோபத்தைக் கட்டுப்படுத்து. குடிகளின் குற்றத்தை மன்னித்து விடு. அவர்கள் எவ்வளவுக்கு விசுவாசமுள்ளவர்களாக இருக் இருக்கின்றனரோ அவ்வளவிற்கு உன்னாட்சி எளிதாக நடைபெறும். மக்களின் ஆதரவு இருந்தால் நீ மாற்றலர்க்கு அஞ்ச வேண்டுவதில்லை. அவர்களிடத்திலே ஒற்றுமை நிலவச் செய். அதுவே உன் அரசுக்குப் பலமாகும். நீ எப்பொழுதும் பெரிய லட்சியத்தோடு இரு. இருப்பதையும் பாதுகாத்துக் கொள். சிவாஜியின் வீர தீரம் உன் நினைவிலே நிற்கட்டும் சோம்பலுக்கும் சுக போகத்திற்கும் இடங் கொடுத்து விடாதே. முயற்சியோடு இரு. யாவும் உனக்கு வெற்றியே யாகும்.

வாழ்க மராட்டியம். வளர்க நின் கொற்றம்.

இங்ஙனம்,

என்றும் உனது நன்மையை நாடும்,

இராமதாசன்."

**சாம்பாஜி :** குலேஷ்! நாம் அவரை ஒரு சாதாரண பரதேசி என்று நினைத்திருந்தோம்.

**கவிகுலேஷ் :** அவருடைய மொழிகளில், அரசியலும், அறிவியலும் துள்ளி விளையாடுகின்றன.

**சாம்பாஜி :** அவரும் ஒரு மேதைதான்.

**மௌனி பிங்களர் :** மகாஞானி.

**சாம்பாஜி :** பிரதமரே! இராமதாசர் விஷயத்தில் நாம் கொண்டிருந்த கருத்தை மாற்றிக் கொண்டோம்.

**மௌனிபிங்களர் :** சமயம் நேர்ந்தால் நேரில் சென்று தரிசிப்பதும் நன்று.

**சாம்பாஜி :** ஆகட்டும்.

**மௌனி பிங்களர் :** மன்னர் என்னை அழைத்த காரியம்...?

**சாம்பாஜி :** கேளும் பிரதமரே! இந்த அமைச்சர் குழு, அறிவுரைக் கழகம் ஆகியவைகளைக் கலைத்துவிட விரும்புகிறேன்.

**மௌனி பிங்களர் :** அரசாங்க நிர்வாகம், ஆலோசனைகட்கெல்லாம்........?

**சாம்பாஜி :** நம் கவியே சர்வாதிகாரம் வகிக்கட்டும். மற்றவர்கள் அவர் சொற்படி நடங்கள்.

## காட்சி 37.

இடம் : சர்க்கார் மாளிகை.
மாந்தர் : அலுவலாளர்கள், கார்பார், கவி.

(சாய்வுப் பெட்டியடிகளில் அமர்ந்தபடி, அலுவலாளர்கள் வேலை பார்க்கின்றனர். கவி மேலதிகாரம் செலுத்துகிறார்.)

**குமாஸ்தா :** *7500 ... 8900...11000...12300...15000...... 19200...22,000.........*

**கவிகுலேஷ் :** கார்பார் ! அவன் என்ன ஆயிரக் கணக்கில் கூட்டுப்புள்ளி போடுகிறான்?

**கார்பார் :** ஜனத்தொகைக் கணக்குங்க.

**கவி :** கோட்டைக்கு 30,000, 40,000 என்று ஏதோ எழுதிக் கொள்ளாமல் ஏனிப்படி எண்ணிக் கொண்ருக்கவேண்டும்?

**கார் :** கூடுதல், குறைதல் இருக்கும் என்பதற்காகத் தான்!

**கவி :** கூடுதலாக இருந்தால் வெளியூரிலிருந்து வந்திருப்பார்கள்; குறைவாக இருந்தால் வெளியூருக்குப் போயிருப்பார்கள் என்று வைத்துக் கொள்ளச் சொல். அவன் இந்த வீண் வேலையை நிறுத்திவிட்டு வேறு வேலையைக் கவனிக்கட்டும்.

**கார் :** உத்தரவு. ஏரிகளில் பாய்ச்சல், வடிகால் பழுது பார்க்கவேண்டிய விபரம் வந்திருக்கிறது.

**கவி :** சரி, பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

**கார் :** சாகுபடி பிரச்சனைங்க...?

**கவி :** சாகுபடி வயல்களிலா? ஏரிகளிலா ?

**கார் :** வயல்களுக்குத் தேவையான தண்ணீரை ஏரிகளில் தானே தேக்கியாக வேண்டும்.

**கவி :** ஏரித் தண்ணீர் இல்லாவிட்டால் மழை இருக்கவே இருக்கிறது.

**கார் :** வேண்டிய பொழுதெல்லாம் மழை பெய்யுமா ?

**கவி :** பெய்ய வைப்பது! ஊரில் சாஸ்திரிமார் எதற்கிருக்கின்றனர்? மான்னியங்களை அநுபவித்துக்கொண்டு அவர்கள் வருணஜபம் செய்யட்டும்! இந்த மராமத்துகள் தேவையில்லை!

கார் : உத்தரவு.

கவி : அரசாங்க சிற்பி எங்கே ஊரில் காணவில்லை ?

கார் : அவர் அலகநந்தாவில் பாலங் கட்டிக்கொண்டிருக்கிறார்.

கவி : ஏன் ? எதிரிகள் சுலபமாக ஆற்றைக் கடந்து வரவா ?

கார் : மக்களின் போக்கு வரத்திற்காகங்க !

கவி : மராட்டியர்களுக்கு நன்றாக நீந்தத் தெரியும். வேலையை நிறுத்திவிட்டு வரச் சொல். இங்கே மன்னருக்குப் பளிங்கு மண்டபம் கட்டியாக வேண்டும்.

(காட்சி மாறுதல்.)

## காட்சி 37. B.

(பளிங்கு மண்டபத்தில் பெண்களுடன்) ஓடிப் பாடி கண்கட்டி விளையாடுகிறான் சாம்பாஜி. இன்ப லீலைகளுக்கிடையில் பளிங்குச் சிலைக்கு முத்தமிடுகிறான். பாவையர்கள் பார்த்துக் கேலி செய்கின்றனர்.)

(காட்சி மாற்றம்.)

## காட்சி 37. C.

(கவியிடம் வழக்காளிகள் நியாயம் கோருகின்றனர்.)

வழக்காளி : துரையவர்களே ! நான் சந்தவாடியில் சுங்க அதிகாரியாய் இருந்து வந்தேன். என்னைப் புரந்தருக்கு மாற்றி விட்டார்கள்.

**கவிகுலேஷ் :** அவசியத்தைக் கருதிச் செய்திருப்பார்கள்.

**வழக்காளி :** தயவு செய்து என்னை மறுபடியும் சந்தவாடிக்கே அனுப்பி விடுங்கள்.

**கவிகுலேஷ் :** எல்லாம் உன் விருப்பம்தானே?

**வழக்காளி :** பிள்ளை குட்டிக்காரன். தள்ளாத வயதில் தாயும் தந்தையும் இங்கே இருக்கின்றனர். அவர்களுக்கு வேறு உதவியில்லை.

**கவிகுலேஷ் :** நீ செத்துவிட்டால்...? அப்பொழுது என்ன செய்வார்கள்? அப்படி நினைத்துக் கொண்டுபோ புரந்தருக்கு.

**வழக்காளி :** கவிராஜ்! எதிர் வீட்டு வீரண்ணன் அடியடியென்று அடித்துவிட்டான். பாருங்கள் என் உடலெல்லாம் புண்ணாகி விட்டது.

**கவிகுலேஷ் :** பதிலுக்கு நீ என்ன செய்தாய்?

**வழக்காளி :** ஒன்றும் செய்யவில்லை. நீங்கள் இருக்கிறீர்கள். ஞாய சபை இருக்கிறது. ஞாயம் கிடைக்குமென்று பொறுத்துக் கொண்டேன்.

**கவிகுலேஷ் :** சோதாத்தனம். உன்போல் கோழைகள் மராட்டியத்தில் மலியக் கூடாது. அடிக்கு அடி, உதைக்கு உதை கொடுத்து பழகவேண்டும். ஓடு.

(காட்சி மாற்றம்.)

## காட்சி 37. D.

(சாம்பாஜி மதுவும் மங்கையருமாகக் கொஞ்சிக் கிடக்கிருன். குதூகலமாக அவன் இன்பத்தைப் பெருக்குவதற்கான நடனங்கள் நடைபெறுகின்றன.)

(காட்சி மாற்றம்.)

## காட்சி 37. E.

காரிபாரி : கவிராஜ்! நமது படை வீரர்கள் ரொம்பவும் ஆத்திரப்படுகிருர்கள். நாளேக் கடத்தி வருவது குழப்பத்திற்கு ஏதுவாகும்.

கவிகுலேஷ் : பொக்கிஷதார் என்ன சொல்லுகிருர் ?

கார் : அவர் கையை விரிக்கிருர். ஒரு செப்புக் காசுகூட இருப்பில்லேயாம்.

கவி : ஆகக் கூடுதல் பாக்கி எவ்வளவாகிறது ?

கார் : 36 லட்சம். முழுவதையும் அவர்கள் எதிர்பார்க்கவில்லே. அரைச் சம்பளம், கால் சம்பளம் கிடைத்தாலே போதுமென்கின்றனர்.

கவி : பொறு. 3 கோடி வரை கடன் கேட்டிருக்கிருேம். வந்ததும் கொடுத்துத் தொலேப்போம்.

கார் : அதுவரையில் வயிறு கேட்குமா ? ஏதாவது வழி செய்யுங்கள்.

கவி : சரி...... (யோசித்து) மொகலாயர் பிரதேசங்களில் புகுந்து கொள்ளேயடித்து வரச் சொல்.

## காட்சி 38.

இடம் : ஆக்ராவில் அவுரங்கசீப் மாளிகை.

மாந்தர் : பாதுஷா, நிஜாம்ஷேக், இளவரசி உந்நிசா.

(பாதுஷா ஒற்றன் கொடுத்த செய்திச் சுருளினைக் கையில் வைத்துக்கொண்டு ஆத்திரத்தோடு பேசுகிறான்.)

பாதுஷா : நிஜாம் ஷேக்! புறப்படு படையுடன். அந்தப் பகற் கொள்ளைக்காரர்களுக்குப் பாடம் கற்பித்து விட்டுவா. சிவாஜியின் காலத்தோடு அந்தச் சிறுமை ஒழிந்து விட்டதென்று எண்ணினேன். சிறு பயல் சாம்பாஜியும் ஆரம்பித்து விட்டான். நமது எல்லையில் புகுந்து கொள்ளையடிப்பதே அவர்கள் குலத் தொழிலாகி விட்டது.

ஐயோ! அழகு நகர் பர்காம்பூர் அக்னியில் வெந்து கொண்டிருக்கிறதாம். நமது அருமைக் குடிமக்கள் ஐயோவென்று அலற அலற சொத்துக்களைச் சூறையாடுகின்றனராம். எவ்வளவு அக்ரமம்! இந்தக் காட்டுத்தனத்தைச் சகிப்பதற்கில்லை. ம்...(ஊங்காரம்) நிஜாம் ஷேக்! உடனே புறப்படு. அந்த மலை எலிகள் ஓட்டம் காட்டுவார்கள். விட்டு விடாதே. அவர்கள் கோட்டைவரை சென்று கொடுமைக்குக் கொடுமை, கோரத்திற்குக் கோரம் செய்துவிட்டுத் திரும்பு.

நிஜாம் : ஹுஜூர்! ஆக்ஞை! (தளபதி செல்லுகிறான்.)

உந்நிசா : அப்பா! அந்தச் சாம்பாஜிக்கும், தங்களுக்கும் என்ன வித்தியாசம்?

பாதுஷா: உந்நீஸ்! அகண்ட மொகல் சாம்ராஜ்யாதிபதி நானெங்கே? சாத்பூராவின் சிறு குன்றுகளில் தவ்விக் குதிக்கும் கள்ளன் சாம்பாஜி எங்கே? (கோபமாக)

உந்நிசா: தங்களரசு பெரிதாக இருக்கலாம். நடவடிக்கை ஒன்றுதானே!

பாதுஷா: பேதைப் பெண்ணே! உனக்கு அரசியல் ஞானம் போதாது. முள்ளை முள்கொண்டுதானே களையவேண்டும்?

## காட்சி 39.

இடம்: சாம்பாஜியின் ஆலோசனை மண்டபம்.

மாந்தர்: சாம்பாஜி, இரகுநாத்பந்தன், கவி, மற்றும் பிரதானியர்கள்.

(மொகலாயரின் ஆக்கிரமிப்பைத் தடுப்பது சம்பந்தமாக ஆலோசிக்கின்றனர்.)

சாம்பாஜி: இரகுநாத்! பாதுஷாவின் படை வந்துகொண்டிருக்கிறது நம்மை நசுக்க.

இரகுநாத்: கேள்விப்பட்டேன் மகராஜ்! அந்த வம்பை வலிய இழுத்தது யார்? இந்தக் கவியின் கண்மூடித் தனந்தானே காரணம்?

சாம்பாஜி: தளபதி! நடந்தது நடந்துவிட்டது. இனி வருகிற நாசத்தைத் தடுக்கவேண்டும். அதுபற்றி யோசிப்போம்.

இரகுநாத்: மகராஜ்! நஷ்ட ஈடு கொடுத்து பாதுஷாவுடன் சமரசம் செய்து கொள்ளுவதே மேலென்று நினைக்கிறேன்.

**சாம்பாஜி :** அது மராட்டியர் வீரத்திற்குப் பழுதாகும். நாம் போருக்கு அஞ்சும் புல்லர்களல்ல. பொங்கி வரும் மொகலாயர்க்கு எப்படிப் புத்தி கொடுப்பதென்றுதான் கேட்கிறேன்.

**இரகுநாத் :** மகராஜ்! என்னை மன்னிக்கவும். வேந்தர் சிவாஜியின் லட்சியத்திலே மதிப்பு வைத்து நான் வாளேந்தினேன் அல்லாமல் வம்புக்கோ, வீம்புக்கோ நான் ஆளல்ல!

**சாம்பாஜி :** தளபதிக்குக் கடமையை நினைவுபடுத்துகிறேன்.

**இரகுநாத் :** மன்னர் எடுத்துக் காட்ட வேண்டிய அளவுக்கு எனக்கு மண்டைக் கருவம் பிடித்துவிடவில்லை. அப்படிப்பட்ட மமதையாளர்கள் தங்களைச் சூழ்ந்திருப்பதால்தான் மறுக்கிறேன். என் வீரத்தை விழலுக்கிறைத்த நீராக்க விரும்பவில்லை. இப்பொழுது கேட்கிறேன் சொல்லுங்கள், மகராஜ்! தாங்கள் முடிசூடிய பிறகு ஆட்சி யாருடைய பிடியிலே யிருந்தது? அமைச்சர் குழுவும், அறிவுரைக் கழகமும் ஏன் கலைக்கப்பட்டன?

மக்களைப் பற்றிய நினைவு தங்கள் மனத்திலே தோன்றிய துண்டா? மந்தகாச வாழ்வும் அந்தப்புர லீலைகளும் போதுமென்றுதானே இருந்து வந்தீர்? கானோஜியினின்றும் வந்த கவிராயனுக்கு இங்கே ஆதிக்கமா? அவனது மௌடீகத்திற்கு மராட்டியம் இரையா? இந்தப் பொறுப்பற்ற தன்மைகளால் கோமான்கள் பலர் குடியேறி விட்டனர். சான்றோர்

கள் பலர் தலையிழந்து விட்டனர். இந்தக் காட்டாட்சியிலே எனக்குக் கடமையை நினைவுபடுத்துகிறீர்கள்! (ஏளனமாக.)

புரட்சி செய்ய மனமில்லாமல் பொறுத்திருந்தோம் இது நாள்...... (கோபமாக.) போதும் உங்களுக்கு ஊழியம் பார்த்தது (வெறுப்பாக.) இதோ வாளைத் துறக்கின்றேன். இந்த வரிசையைத் துறக்கின்றேன் (சின்னங்களைக் களைதல்.)

சாம்: (நகைத்து) இரகுநாத்! இது ஆத்திர முடிவு. அதற்காக நான் அயர்ந்துவிடப் போவதில்லை. வேறு சூரர்களிடம் துணை கேட்கப் போவதில்லை. எந்தை கற்று வைத்த போர்க்கலை இன்னமும் மறந்து போகவில்லை. நானே வாளேந்திப் படை நடத்துகிறேன்.

(படை புறப்படும் ஆரவாரம் கேட்டல்)

## காட்சி 40.

இடம்: அரவுங்கசீப் மாளிகை.

மாந்தர்: அரவுங்கசீப் (பாதுஷா), தூதுவர்கள், உந்திசா.

தூதுவன் 1: உசூர்! பயங்கரப் போர். மிகவும் கடுமையான தாக்குதல். ரத்த நதி பெருக்கெடுத்து விட்டது ......

பாதுஷா: அச்சா!

தூது 1: நமது போர்க் கருவிகட்கும் பெருஞ் சேதம்.

பாது: நமது போர்க் கருவிகளுக்கா?

தூது 1: ஆம்; உசூர்! முன்னணிப் படைவீரர்களும் அழிந்துவிட்டனர்.

பாது: என்ன! அவ்வளவு கடுமையா? இக்ளாஸ்கான் நீயும் புறப்படு ஒரு லட்சம் வீரர்களுடன்.

இக்ளாஸ்: ஆக்ஞை.....(செல்லுகிறான்.)

உந்நிஸா: அப்பா! பாதுகாப்பிற்காக ஏற்பட்ட படையை மாச்சரியங்கொண்டு போராடி மடியச் செய்பவா?

பாது: உந்நீஸ்! உன் யோசனைகளைக் கேட்கும்போது சொல்.

(அதுபோது இரண்டாவது தூதுவன் வருகிறான்.)

தூது 2: சர்க்கார்!......களத்திலே நிலைமை நாம் நினைத்தது போலில்லை. மூன்று முனைகளில் மராட்டியர் முன்னேறி வருகின்றனர். தாக்குப் பிடிக்கவே முடியவில்லை.

பாது: ஆ......அந்தத் தறுதலைப்பயல் சாம்பாஜியா அவ்வளவு சாமர்த்தியமாகப் போர் நடத்துகிறான்?

தூது 2: சண்ட மாருதம் போல் சாடுகிறான். போர்க்கலையில் சிவாஜிக்கு இளைத்தவனல்ல!

பாது: (பெருமூச்சுடன்) நிஜாம் ஷேக்கை நம்பிப் பயனில்லையா? இதோ நானும் புறப்படுகிறேன் போர் முனைக்கு.

உந்: அப்பா! பொறுங்கள். சர்தார்களும், ராணுக்களும் எதற்கிருக்கின்றனர்? அவர்களை அனுப்பிவைப்போம்.

(அதுசமயம் மூன்றாவது தூதுவன் வருகிறான்.)

**தூது 3 :** உசூர்! தளபதி அனுப்பிய யுத்தச் செய்தி......

(செய்திச் சுருளைத் தருகிறான்)

**பாது :** அவனென்ன புலம்பியிருக்கிறான்? அதைப் படி!

(உந்நிசா படிக்கிறாள்.)

"உசூர்! என்னை மன்னிக்கவும். நிலைமையை எழுத என் கை நடுங்குகிறது. எதிரிகள் ஒரு முனையிலாவது நேருக்கு நேர் நின்று அணிவகுத்துப் போராடவில்லை. பருவமழையும் அவர்களுக்குச் சாதகமாகவே இருக்கிறது. இடி மின்னல்களுக்கிடையிலே பருந்துப் பாய்ச்சலால் திடீர்திடீரென வந்து தாக்குகின்றனர். இந்த நெருக்கடியினின்றும் தப்புவதற்காக நம் படைகளைப் பின்வாங்கிக்கொண்டு வந்து பத்திரமான இடத்தில் நிறுத்தியிருக்கிறேன்..........."

**பாது :** பேடித்தனம். (பல்லைக் கடித்தல்.)

"......சர்க்கார்!......நான் வடிக்கும் இரத்தக் கண்ணீர் சாட்சியாக எழுதுகிறேன். சாம்பாஜியைப் பழி வாங்காமல் இந்த முகத்தோடு திரும்பமாட்டேன்.

இப்படிக்கு,

தாங்கள் ஆக்ஞைக்குக் காத்திருக்கும்,

நிஜாம் ஷேக்."

**உந் :** அப்பா! என் சொல்லைக் கேளுங்கள். எப்பொழுதும் நாமே வெற்றிக் குரியவர்களாக இருக்க முடியாது! எதிரியும் சதுரனைத்தான் தெரிகிறது. விட்டுக் கொடுத்துச் சமரசம் செய்து கொண்டாலென்ன?

பாது: (நகைத்து) என் ஜென்மப் பகைவனிடமா சமரசம்? அல்லா!......அந்தச் சண்டாளன் அழியும் வரை இதை (குல்லாய்) நான் அணிவதில்லை.

## காட்சி 41.

இடம்: நிஜாம் ஷேக்கின் பாசறை.

மாந்தர்: நிஜாம் ஷேக், சிர்கே.

(சிர்கே பக்கீர் வேஷத்தில் தோன்றுகிறார் ஷேக் அடையாளம் புரியாமல் திகைக்கிறார்.)

சிர்கே: அல்லாஹு அக்பர்.

நிஜாம்: (திகைப்புறுதல்)

சிர்கே: ஷேக்! உனக்கு அல்லாவின் கருணை நிறைய உண்டு. உன் எதிரிகள் நாசமடைகின்றனர்........ (குரலை மாற்றி)

நிஜாம்: நிறுத்து. யார் அங்கே? (கோபமாக)

(வாயிற் காவலன் உள்ளே வருகிறான்.)

முட்டாள். இந்தப் பக்கீரை ஏன் அனுமதித்தாய்?

சிர்கே: நிஜாம்! என்னைத் தெரியவில்லையா? (சொந்தக் குரல்)

நிஜாம்: சிர்கே! (ஆச்சரியத்தோடு) நீயா? எப்பொழுதிருந்து இந்த விரதம் பூண்டாய்?

சிர்கே: விரதமல்ல; வேஷம்! (வேஷத்தைக் கலைக்கிறான்) மொகல் எல்லையில் உலவ இது தேவைப் பட்டது. மராட்டியப் பிரதேசத்தில் பண்டார வேடம் பூண்டிருந்தேன்.

நிஜாம் : இந்தப் பாட்டிற்கெல்லாம் பலனுண்டா? (ஆவலுடன்)

சிர்கே : கைமேல் கிடைத்திருக்கிறது.

நிஜாம் : சொல். அந்த நற்செய்தியைக் கேட்க மிகவும் ஆவலாக இருக்கிறது.

சிர்கே : பாய்! ஆரம்ப வெற்றிகளைக் கண்டே சாம்பாஜிக்கு எக்களிப்பு மிஞ்சிவிட்டது. அந்தக் கவிப்பயல் வேறு தூபம் போட்டுவிட்டிருக்கிறான்.

நிஜாம் : அதனால்?

சிர்கே : மிகவும் துணிச்சலோடு பாசறையை விட்டு வெளியேறி சங்கமேஸ்வரம் சென்றிருக்கிறான். இரவுக்கிரவே நாம் சென்றால் சிறைப்பிடித்து விடலாம்.

நிஜாம் : சிர்கே! புலிபிடிக்க ஆசைப்பட்டு அதன் குகையிலே சென்று மாட்டிக் கொள்வதா?

சிர்கே : ஷேக் சாகேப்! அங்கே அவன் சதுரங்க சேனையுடன் செல்லவில்லை. உல்லாச மாளிகையில் சரச வல்லிகளுடன் கொஞ்சிக் கொண்டிருக்கிறான். மதுக்கடல் வேறு முழுகடித்துக் கொண்டிருக்கிறது.

நிஜாம் : சரியான சந்தர்ப்பம்தான். வழிநெடுக அவர்கள் பாசறை இருக்கிறதே!

சிர்கே : குறுக்கு வழி வேறிருக்கிறது.

நிஜாம் : அச்சா!

## காட்சி 42.

இடம் : சங்கமேஸ்வர மாளிகை.

மாந்தர் : கவி, சாம்பாஜி, சாரணர், பெண்கள்.

(கவியும், சாம்பாஜியும் கும்மாளமடித்து விட்டுப் பின்னிரவில் உறங்கிக் கிடக்கின்றனர். படுக்கையறையினின்றும் சரசவல்லிகள் விரச நிலையில் வெளியேறுகின்றனர். சாரணர்கள் பரபரப்புடன் உள்ளே வருகின்றனர். காவலன் மறிக்கிறான்.)

**சாரணர் :** ஆபத்து...ஆபத்து...மன்னரை உடனே பார்க்க வேண்டும்.

**காவலன் :** அட போப்பா! பொழுது விடியட்டும். இப்ப தான் அவர் அயர்ந்து தூங்குகிறார்.

**சார :** சரி, சரி. நான் போய்ப் பார்த்துக் கொள்ளுகிறேன்.

(நுழைகிறான்.)

**காவ :** கண்டிப்பான உத்தரவையா, ஆண்களை உள்ளே அநுமதிக்கக் கூடாதென்று!

**சார :** அட! சே! சும்மாகிட!

(தள்ளிக்கொண்டு நுழைதல். நிலைமை தவறி சாம்பாஜீ தலைகீழாகப் படுத்திருக்கிறான்.)

**சார :** அரசே! அரசே!! (எழுப்புகிறான்.)

(சாம்பாஜியிடம் சலனமில்லை.)

(காலைப் பிடித்து அசைக்கிறான்) எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்:

(குறட்டை பலமாகிறது.)

(காதில் கத்துகிறான்) மகாராஜா!

சாம் : (தூக்க மயக்கத்தில்) போடி சனியனே !

சார : மகாராஜ் ! சாரணன் எழுப்புகிறேன்.

சாம் : (அரைக் கண் திறந்தபடி) முட்டாள் ! ஏண்டா தொல்லை செய்கிறாய் ?

சார : மொகலாயப் படை வந்து கொண்டிருக்கிறது, மன்னா !

சாம் : என்னடா உளறுகிறாய் ?

சார : உளற வில்லை, மகாராஜ்! ஆரவல்லிக் காட்டில் புகுந்து வருகின்றனர்.

சாம் : மடையா! போய்த் தூங்குடா! விடிந்த உடன் வந்து சொல்.

சார : பேராபத்து! தாமதிக்க நேரமில்லை! எழுந்திருங்கள்.

சாம் : டேய்! கனவு கண்டாயா ? இன்னொரு தரம் இப்படி உளறினால் உன் மூக்கை உடைத்துவிடுவேன்.

சார : அதோ கேளுங்கள், படை வருகிற ஆரவாரத்தை!

(ஆரவாரம் கேட்கிறது.)

சாம் : போய்க் கவியிடம் சொல்லடா ! அப்படி வந்தாலும் வசைபாடி ஒழித்து விடுவான்.

(மீண்டும் தூங்க ஆரம்பிக்கிறான்.)

சார 2 : (உள்ளே வந்து) மன்னா ! மாளிகையை முற்றுகை இட்டு விட்டார்கள் (பதறல்)

**சார 1:** (தண்ணீரை எடுத்துச் சாம்பாஜியின் தலையில் கொட்டுகிறான்.)

(சாம்பாஜி வாரிச்சுருட்டி எழுகிறான். படையின் ஆர்ப்பரிப்புப் பலமாகக் கேட்கிறது.)

**சாம்:** அது என்ன வெளியில் ரகளை ?

**சார:** எதிரிகள் சூழ்ந்துவிட்டனர் அரசே!

**சாம்:** எடு, வாளை.

## காட்சி 43.

**இடம்:** மாளிகைக்கு வெளியில்.

**மாந்தர்:** மொகலாய வீரர்கள், சாம்பாஜி, கவி.

(சாம்பாஜி இருகையிலும் வாளேந்திப் புயலெனச் சுழற்றிச் சாடிய வண்ணம் எதிரிகளின் அணிவகுப்பைப் பிளந்துகொண்டு தப்புகிறான். சாம்பாஜியைப் பின்தொடர்ந்த கவி பிடிபட்டு விடுகிறான். கவியை மீட்பதற்காகச் சாம்பாஜி மீண்டும் வந்து போராடுகிறான். எதிரிகள் சிதறுண்டு போகின்றனர். அந்த நிலையில் சாம்பாஜியின் வாள் முறிந்து விடுகிறது. மொகலாயர் சிறைப்பிடித்து விடுகின்றனர்.)

## காட்சி 44.

**இடம் :** வழிநடை. (ஒரு கோயில் வாயில்.)

**மாந்தர் :** கவி, சாம்பாஜி, மொகலாய வீரர்கள், அர்ச்சகன்.

(பிடிபட்ட சாம்பாஜியையும், கவியையும் நடத்திச் செல்லுகின்றனர். வழி நடையி லுள்ள தொரு கோயில் வாயிலை யடைந்ததும் திடீரெனப் பாய்ந்து சாம்பாஜி யும், கவியும் கோயிலுட் புகுந்து திட்டி வாசலை மூடிவிடுகின்றனர். கோயிலின் உள்ளே குருக்கள் வைகறைப் பூசை வைத் துக் கொண்டிருக்கிறான்.)

**குருக்கள் :** ஆ! மன்னா! தாங்களா! (வியப்புடன்)

**கவிகுலேஷ் :** ஆபத்து!

**குரு :** என் தலையைக் கொடுக்கிறேன். பயப்படாதீர்கள்.

**கவி :** (குருக்களின் காதில் இரகசியம் கூறுகிறான்.)

(வெளியிலிருந்து ஆரவாரம் கேட்கிறது.)

**ஆரவாரம்:** வளைத்துக் கொள்ளுங்கள்! அந்தப் பக்கம் போ. நீ இங்கே நில்லு.

**குரு :** ஆஹா...மகாராஜ்! அந்தப் பெருமை எனக்குக் கிடைக்கவேண்டுமே.

**கவி :** மிகவும் தந்திரமாக நடிக்கவேண்டும்.

(கோயிலுக்கு வெளியில் மொகலாயர்கள் கதவைப் பிளக்கின்றனர்.)

சிர்கே: கான்சாகேப்! நாசவேலையை நிறுத்தச் சொல் இது இந்துக் கோயில். இஸ்லாமியர் உள்ளே நுழையக்கூடாது. ரஜபுத்திரர்களை வரவழை.

கான்சாகேப்: அதற்குள் எதிரிகளுக்குச் செய்தி எட்டி விட்டால் சாம்பாஜிக்கு உதவி கிடைத்து விடுமே!

சிர்கே: நாம் வெகுதூரம் வந்து விட்டோம். குறுக்கே அந்தக் குன்றுதானிருக்கிறது. அப்பால் நமது பாசறை.

கான்: அச்சா! (தன் வீரர்களைப் பார்த்து) எச்சரிக்கையோடு இருங்கள். ரஜபுத்திரர் வரட்டும். (வீரன் ஒருவன் ஓடுகிறான்.)

(திட்டி வாயில் திறக்கப்படுகிறது. மொகலாயர்கள் பரபரப்புடன் தயாராக நிற்கின்றனர். பூஜை மணியுடனும் நிவேத்தியத் தட்டுடனும் குருக்கள் மந்திரத்தை முணுமுணுத்துக்கொண்டு வெளியே வருகிறான்.)

சிர்கே: அந்த அர்ச்சகன் தொலையட்டும். வழியை விடுங்கள்.

(வீரர்கள் ஒதுங்குகின்றனர். திட்டி வாயில் வழியாகக் கோயிலின் உட்புறம் தெரிகிறது. சாம்பாஜி வேற்கம்பியுடன் காணப்படுகிறான், குருக்கள் வெளியேறுகிறான்.)

சிர்கே: பிடியுங்கள் அவனை (குருக்களை).

கான்: சிர்கே! இது என்ன தடுமாற்றம்? (கோபமாக)

சிர்கே: அதோ பார். அவன் கழுத்தை.

(கழுத்தில் வயிரமணி மின்னுகிறது.)

நம் கண்ணில் பொடி தூவ நினைத்து விட்டான்.

(வீரர்கள் பிடித்து வருகின்றனர்.)

சாம்பாஜி! அரசனாக இருந்தது போதுமென்று அர்ச்சகன் உத்தியோகம் எடுத்துக் கொண்டாயா? உருவமாறிச் செல்ல உனக்குத் திறமை போதாது. உன் கழுத்துமணி காட்டிக் கொடுத்துவிட்டது பார். மொகல் தர்பாரிலே உனக்குப் பலமான வரவேற்புக் காத்திருக்கிறது வா.

## காட்சி 45.

இடம் : ஔரங்கசீப் மாளிகை.
மாந்தர் : பாதுஷா, உந்நிசா.

பாதுஷா: அச்சா! அல்லா கருணை செய்துவிட்டார். (அல்லாவின் கருணையே கருணை.)

(கையில் செய்திச் சுருள்.)

உந்நிசா: அப்பா! இது என்ன மாற்றம்? ஆத்திரமே உருவாக இருந்து வந்தீர்கள். திடீரென்று ஆனந்தப் பள்ளுப் பாடுகிறீர்களே.

பாதுஷா: மகளே! மமதை பிடித்த அந்த மலைக் கள்ளன் பிடிபட்டு விட்டான்.

உந்நிசா: மலைக் கள்ளனா?

பாதுஷா: ஆம்; அவன்தான் அந்த மராட்டியக் கொள்ளைக்காரன்! இனி, சாத்பூரா நம் ராஜ்யத்திலே அடக்கம். கொங்கணத்திலே நம் கொடி பறக்கப் போகிறது குமாரி...... பார், சாம்பாஜி வர்க்கத்தைச் சரித்திரத்திலே இடம் பெறாமல் நசுக்கி விடுகிறேன்.

**உந்நிசா :** அப்பா! பழிவாங்கும் திட்டம் பயனற்றது. எதிரியின் கை வலுத்தாலும் போச்சு; நம் கை இளைத்தாலும் போச்சு; மீண்டும் பூசல்தான்! சிவாஜியோடு மராட்டியப் பகை தீர்ந்து விட்ட தென்றுதான் எண்ணியிருந்தீர்கள். இந்தச் சாம்பாஜி கிளம்ப வில்லையா? இவனும் நமக்குத் தோற்றுவிட வில்லை. சூதாகப் பிடித்து விட்டீர்கள். இங்கே நீங்கள் பகை முடித்தால் மராட்டியத்தில் அதற்கு ஆத்திரப் புகை எழும்பும். அடிபட்ட புலி அடங்கி விடுவதில்லை; துடிதுடித்துப் பாயும்! மிதிபட்ட நாகம் ஓடி ஒளிவதில்லை; சீறிக் கடிக்கும்! ஏன் இப்படி ஒரு தீராத பகையைத் தேடிக் கொள்ள வேண்டும்? பிடிபட்ட புலியின் நகத்தை நறுக்கிப் பல்லைப் பிடுங்கி விட்டால், அது பூனைபோலாகி (விடாதா ? ) விடுமே.

**பாதுஷா :** ஆம்; நீ சொல்வதிலும் உண்மை யிருக்கிறது. சிந்திக்கின்றேன்.

## காட்சி 46.

**இடம் :** சிறைக்கூடம்.
**மாந்தர் :** சாம்பாஜி, தூதுவன்.

(சாம்பாஜி அருவருப்பும், ஆத்திரமும் கொண்ட மனத்தினனாய் உலவிக்கொண் டிருக்கிறான். மொகல் தூதுவன் மிகவும் குழைவாகப் பேசுகிறான்.)

**தூதுவன் :** சிந்தித்துப் பாருங்கள்...... அரசே! போர், போரென்று காலமெல்லாம் கடத்திக் கொண்டிருந் தால் இருதரப்பினருக்குந்தான் பெரும் சேதம். குடி

மக்களுக்கும் பெரும் தொல்லை. மாச்சரியங்களை மறந்து விடுங்கள். மனங் கலந்து பழகுவோம்.

சாம்பாஜி: இந்த உபதேசம் உங்கள் ஔரங்கசீப்புக்குத் தேவை.

தூதுவன்: பாதுஷா!... பாதுசா மனப்பூர்வமாக விரும்புகிருர்.

சாம்பாஜி: அதற்கு அடையாளந்தான் என்னைச் சதியாகப் பிடித்து வந்திருப்பது போலும்!

தூதுவன்: போர் முனையில் நடந்து போனதற்கு அவர் பொறுப்பல்ல. இப்பொழுதும் அவர் தங்களை மன்னருக்குரிய மரியாதையோடு நடத்தக் காத்திருக்கிருர். அது தங்கள் கையில்தா னிருக்கிறது.

சாம்பாஜி: எது என் கையிலே இருக்கிறது?

தூதுவன்: ஒத்துப் போவது?

சாம்பாஜி: எந்த வகையில்?

தூதுவன்: பிடித்த கோட்டைகளையும், வளைத்த பிரதேசங்களையும் விட்டுக் கொடுப்பது, ஏற்பட்டுள்ள சேதாரத்திற்கு ஈடு தருவது, மொகல் எல்லையில் மராட்டியர் கொள்ளை யடிப்பதை நிறுத்துவது, எங்கள் எதிரிகளுக்குத் துணை செய்யாம லிருப்பது ஆகியவைகளை ஒப்புக் கொள்ளவேண்டும்.

சாம்பாஜி: இதற்காகத்தானு நீர் தூது வந்திருக்கிறீர்?

தூதுவன்: மன்னு! என் வேண்டுகோளைத் தட்டிக் கழித்து விடாதீர்கள். நிபந்தனைகள் ஒன்றும் கடுமை

யல்ல. இந்த உறவினால் இரு அரசுகளுக்கும் லாபம் தான்.

சாம்பாஜி : மறைமுகமாக என்னிடம் சரணாகதியை எதிர்பார்க்கிறீர். அதற்கு நான் மானங்கெட்டவனல்ல. நீ சொல்லுகிற இந்த அரசியல் உறவைவிட அதிகப் பலன் கொடுக்கும் மொகல் இளவரசியை எனக்கு மணம் செய்து கொடுத்தால், முதலில் அதனைக் கேள். பிறகு நிபந்தனைகளைப்பற்றிச் சிந்திக்கிறேன்.

## காட்சி 47.

இடம் : மொகல் தர்பார்.

மாந்தர் : பாதுஷா, சர்தார்கள், ராணாக்கள், சாம்பாஜி, கவிகுலேஷ் நிஜாம்ஷேக், முதலியோர்.

(சர்தார்களும், ராணாக்களும் தர்பாரில் வரிசை வரிசையாக வீற்றிருக்கின்றனர். ஔரங்கசீப் நிலைமையை விளக்குகிறான்.)

பாதுஷா : இதுவரையில் தோற்ற மன்னர்கள் எவருக்குமே வழங்காத சலுகை. எதிரியைக் கைதி என்றுகூடக் கருதாமல் ஒப்பந்தம் செய்துகொள்ள முன்வந்தோம். அதற்கு நம் மானத்தையே விலையாகக் கேட்டு விட்டான் அந்த மூர்க்கன். வேறு வழியில்லை. முடிவில் போர்க் குற்றவாளியாக விசாரணை நடத்த வேண்டியிருக்கிறது.

(அப்பொழுது கவியும், சாம்பாஜியும் கொண்டுவரப்படுகின்றனர்.)

பாதுஷா : (சிம்மாசனத்தை விட்டிறங்கி மண்டியிட்ட படி) ஆண்டவனே ! என் பணிவை ஏற்றுக்கொள். நான் செய்த சபதம் நிறைவேறி விட்டது. அதற்காக நன்றி செலுத்துகிறேன். எதிரி இஸ்லாத்தின் பரம பகைவனுனாலும் என் நீதி வழுவாமல் இருக்கத் துணை செய்.

கவிகுலேஷ் : (கிண்டலாக) மராட்டிய மன்னர் திலகமே! அதோ பாருங்கள், பாதுஷா மண்டியிட்டுத் தங்களை வரவேற்கிறார்.

சர்தார்கள் : ஆஹா !...... (பல குரல்கள்.)

(பல வாள்கள் உறையினின்றும் கிளம்புகின்றன.)

நிஜாம் : என்ன ஆணவம் ! (வாளை ஓங்குகிறான்.)

(பாதுஷா கை அமர்த்துகிறார். பாதுஷாவின் கண்களில் கோபக் கனல் வீசுகிறது.)

பாதுஷா : ஷேக் ! துடுக்குத்தனம் பேசிய அவன் நாவைத் துண்டித்து விடு. விசாரணைக்குரிய தகுதி அவனுக்கில்லை. கொண்டுபோ.

(கவி இழுத்துச் செல்லப்படுகிறான்.)

நிஜாம் : சாம்பாஜி ! தர்பாருக்குத் தலை வணங்கு.

சாம்பாஜி : மாற்றலரைப் பணிந்தறியேன். அது எங்கள் மரபுக்குப் புறம்பானது !

நிஜாம் : நாங்களும் ஆணவத்தை அநுமதிப்பதில்லை. நீ நீதிக்குத் தலை வணங்கித்தான் வேண்டும்.

சாம்பாஜி : நான் இங்கே நீதி கோரி நிற்கவில்லை. நிலைமை என்னை நிறுத்தி வைத்திருக்கிறது. ஒரு நிராயுத பாணியைச் சுற்றி உருவிய வாளுடன் ஒன்பது வீரர்கள். இது நல்ல தர்பார். இந்த விசித்திர விசாரணை உலகில் வேறு எங்குமே நடைபெற முடியாது. (கிண்டலாக.)

பாதுஷா : ஷேக்! கைதியை அப்புறப்படுத்து. (அகற்றப் படுகிறான்.)

(பக்கத்திலிருந்து சர்தாரின் காதில் ஏதோ சொல்லி விடுகிறார்.)

சர்தார் 1 : அந்த வணங்கா முடியனைப் பணியவைத்தே யாகவேண்டும்.

பாதுஷா : முன்னால் இரண்டு முறை நம் பிடியினின்றும் தப்பிவிட்ட அகந்தையால் பேசுகிறான். இது மூன்றாவது முறை. அவனுக்கு ஒரு முடிவு கட்டிவிட வேண்டும்.

சிர்கே : இன்னமும் அவனை உயிரோடு வைத்திருப்பது தான் அந்த ஆணவத்திற்குக் காரணம்.

பாதுஷா : மரணத்தின் பிடியிலே ஒப்புவிப்பது பெரிதல்ல. அது, மற்ற மற்ற ஆணவக்காரர்களுக்கும் படிப்பினையாகத்தான் இந்த விசாரணை.

(குறுக்கே அடைப்பொன்று தர்பாரில் வைக்கப்படுகிறது. அந்த அடைப்பில் தணிவான ஒரு பாதையுமிருக்கிறது.)

பாதுஷா : ஷேக்! அந்தக் குறும்பனை மீண்டும் கொண்டு வா.

(தணிவான பாதை வழியாக வீரர்கள் சிலர் குனிந்து தர்பாருக்குள் நுழைகின்ற

னர். சாம்பாஜி அந்தப் பாலதையில் கால்களை முன்னால் நுழைத்துப் புகுந்தான்.)

சர் 1: அவமானம்! அவமானம்!!

சர் 2: மமதை பிடித்தவன் தர்பாரை அவமதித்து விட்டான்.

சர் 3: இனி விசாரணை தேவையில்லை.

பாது: ஷேக்! செருக்கோடு புகுத்திய அந்தக் கால்களை நறுக்கி விடு.

ஷேக்: ஆக்ஞை!

சாம்: அகண்ட மொகல் சாம்ராஜ்யாதிபதியின் ஆசை என் கால்களை எட்டிப் பிடித்தது போலும்!

பாது: ஷேக்! நிபந்தனையற்ற சரணாகதிக்குக் கட்டுப் பட்டால் இங்கே நிறுத்தி வை.

சாம்: மராட்டியர் அகராதியிலே அந்த வார்த்தை கிடையாதென்று சொல்.

பாது: இன்றேல் கொண்டுபோ கொலைக் களத்திற்கு. கொள்ளையடித்து, கொள்ளி வைத்து, கொலை நடத்தி வந்த குற்றங்களுக்காக மரண தண்டனை விதித் திருக்கிறேன். இவன் வெறியாடல்களுக்கு துணை நின்ற அந்தக் கவிராயனையும் கண்டதுண்ட மாக்கி விடு.

## காட்சி 48.

இடம்: அந்தப்புரம்.
மாந்தர்: உந்நிசா, பாதுஷா, தோழி.

(உந்நிசா துயரமே உருவாகி, துன்பக் குமுறலை ஆற்றிக் கொண்டிருக்கிறாள். வேதனை கீதம் பின்னணி செய்கிறது. பாதுஷா மகளைக் காண வருகிறான்.)

பாதுஷா: மகளே! இது என்ன கோலம்? (படபடப் புடன்.)

உந்நிசா: அப்பா! அப்பா!! (தேம்பலுடன் தந்தையின் மார்பில் முகத்தைப் புதைத்தழுகிருள்.)

பாது: உந்நீஸ்! உன்னைத் துன்பப்படுத்தியது யார்? இந்தச் சோகத்திற்குக் காரணமென்ன? சொல்லம்மா! சொல். உன்னை இந்த நிலையிலே காண என் மனம் பதறுகிறது!

(உந்நீஸ் மேலும் வேதனையுடன் புலம்புகிருள்.)

சேடி: உசூர்! இளவரசியார் விதவைச் சடங்கினை மேற்கொண்டு விட்டார்கள்.

பாது: ஆ! மகளே! இது என்ன விபரீதம்?

உந்: என்னை மன்னியுங்கள்! என் வாழ்வு இருண்டு விட்டது.

பாது: நீ என்னம்மா சொல்லுகிருய்?

உந்: அப்பா! இந்தச் சடங்கின்மூலம் என் கற்பையும் இஸ்லாத்தின் பெருமையையும் காப்பாற்றிக் கொண்டேன்.

பாது: மகளே! இதென்ன உளறல்? உன் உடல் நிலை சரியாகத்தானே இருக்கிறது?

உந்: அறிவும் தடுமாறி விடவில்லை. ஒரு மாவீரனுல் விரும்பப்பட்ட நான் அவன் மரணத்துக்குப் பின்னும் மங்கலப் பெண்ணுக இருப்பது கற்பல்ல என்று கருதித்தான் வாழ்க்கைச் சுகங்களை வெறுத்து இந்த விரதம் பூண்டேன்.

பாது: ஐயோ, மகளே! நான் அவன் அழிவை விரும்பினேன். நீ அவன் அன்பை நாடி விட்டாயா? உன் தூய இதயத்திலே அந்தத் தூர்த்தனுக்கு எப்படி இடம் கொடுத்தாய்?

உந்: அப்பா! தூற்றுதீர்கள் அந்தச் சூரனை. அவன் உயிர் துடித்துக் கொண்டிருக்கும் இந்நேரம் இதோ

என் உரிமைப் பத்திரம். உங்கள் ஆசை மகளுக்குச் செய்ய வேண்டிய சீர் வேறில்லை.

(பத்திரத்தைத் தருகிறாள்.)

—பாதுஷா படிக்கிறான்—

"வளர்க இஸ்லாம் !

பாதுஷா ஔரங்கசீப்பின் பிரேமைக்குமாரி ஜீனத் உந்நிசா செய்து வைக்கும் உரிமைப் பத்திரம்...... எனக்கும் என் சொத்துக்களுக்கும் வாரிசாக என் காதலரசன் (மகாராஷ்டிர சத்திரபதி சாம்பாஜி) பெற்ற செல்வன் சாகுவை நியமிக்கின்றேன்......"

(பாதுஷா திகைப்பினால் அதிர்ச்சியுற்று நிற்கிறான்.)

உந் : அப்பா ! என் கடைசி வேண்டுகோள். என் புதல்வன் சாகுவிற்கு மகாராஷ்டிர சத்திரபதியாகப் பட்டம் கட்டி வையுங்கள்.

பாது : மகளே ! நான் பெற்ற வெற்றியெல்லாம் தோல்வியாகி விட்டது. யாரங்கே ? ஓடு! சாம்பாஜியின் தண்டனையை நிறுத்தச் சொல் !

## காட்சி 49.

இடம் : பலிபீடம்.

மாந்தர் : சாம்பாஜி, இக்ளாஸ்கான், கொலையாளி.

(சாம்பாஜி பலி பீடத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறான். கொலையாளி வாளுங் கையுமாக நிற்கிறான்.)

இக்ளாஸ்கான் : சாம்பாஜி ! கடைசியாக ஒரு சந்தர்ப்பம் தருகிறேன். நீ இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் உனக்கு மீண்டும் வாழ்வுண்டு.

சாம்பாஜி : (நகைத்து.) இஸ்லாத்தை எதிர்த்து இந்து சாம்ராஜ்யம் நிறுவிய சிவாஜி மைந்தனிடம் மத மாற்றத்தை எதிர்பார்க்கிறீர். (ஏளனமாக) என்ன துணிவு? வாளால் மதத்தைப் பரப்பும் உங்கள் வைராக்கியம் என்னிடம் செல்லாது. என்னை நீ அணு அணுவாய்ச் சிதைத்தாலும் என் மரபின் பெருமையை விட்டுக் கொடுக்க மாட்டேன். நீங்கள் செய்த சதியைவிடச் சாவு ஒன்றும் பயங்கரமான தல்ல. சிர்கேயின் துரோகத்தால்தான் நீங்கள் சிந்து பாடுகிறீர்கள். இது சதமல்ல. என் மரண மூச்சு மராட்டியப் புயலை எழுப்பும். ஒரு மராட்டியனுகப் பிறந்தேன். ஒரு மராட்டியனுகவே மடியத் தயார். (தலை குனிகிருன்.)

இக்ளாஸ்கான் : அடி சாவு மணியை.

(மணி ஒலிக்கிறது. வாள் ஓங்கப்படுகிறது.)

[காட்சி மாற்றம்]

(கல்லறை எழுப்பப்பட்டுள்ளது. அதன் முன் னிலையில் மன உருக்கத்தோடு உங்கிசா வேதனை கீதம் இசைத்தபடி மாலை சூட்டுகிருள்.)

## காட்சி 50.

இடம் : மகாராஷ்டிர அரண்மனை.

மாந்தர் : சாகு, மராட்டியப் பிரமுகர்கள், மொகலாயப் பிரமுகர்கள்.

(சாகு மராட்டிய மன்னனுக முடிசூட்டப் படுகிருன். மங்கல வாத்தியங்கள் முழங்கு கின்றன.)

மன்னன் சாகு நீடு வாழ்க!
மராட்டிய, மொகல் உறவு நிலைபெறுக!
வாழ்க மராட்டியம்!
வளர்க மராட்டியம்!

(என வாழ்த்துக்கள் எதிரொலிக்கின்றன.)

முற்றும்

திராவிடன் பதிப்பகம்